

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

பங்குனி - சித்திரை
ஏப்ரல் - 2020

மலர் 9 இதழ் 4

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் <br> பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 5 |
| நீதிக் கதைகள் <br> பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 7 |
| அனுக்கிரஹ பாஷணம் <br> பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 10 |
| தமிழ் பாகவதம் | 13 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 15 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 23 | 17 |
| ஜீவனின் முட்டாள்தனம் | 19 |
| காளிதாஸரின் விஷ்ணு துதி | 20 |
| வாழ்வின் நான்கு நிலைகள் | 22 |
| புராணக்கதை | 24 |
| மஹிஷாஸுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 26 |
| ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி | 27 |
| வேதாந்த ஸாரம் | 29 |
| மகாபாரத சுருக்கம் | 31 |
| அஹங்காரம் | 33 |
| எல்லா செய்திகளும் இரண்டே வார்த்தைகளில் | 36 |
| அத்வைத வினா - விடை | 41 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 43 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 45 |

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## ஜய ராமஜன்மபூமி

வாசகர்கள் அனைவருக்கும் சார்வரீ வருஷ புத்தாண்டு வாழ்த்துக்கள். கிட்ட தட்ட 500 வருடங்களாகப் போராடி, வாதப்ரதிவாதங்கள் நடந்து வன்முறைகள் அரங்கேறி, ஒருவழியாக ராமஜன்மபூமி நமக்கே சொந்தம் என்னும் தீர்ப்பு வந்தது. எத்தனை இன்னல்கள், மனதில் தாபம். தர்மம் உள்ளதா எனும் ஐயம். ராவணவதம் கூட சுலபமாக நடந்துவிட்டது.

ராமருக்கு கோயில் அவருடைய நாட்டில் வருவதற்கு இவ்வளவு போராட்டம். போலி வாதங்கள். போலி நாடகங்கள். இத்தனையும் மீறி நடக்குமா என்பது மறைந்து நடந்தேவிட்டது. ராம பக்தர்கள் மனதில் ஆனந்தம். காதில் தேன். இதைத் துணிந்து செயல்படுத்திய ஸ்ரீ ரஞ்சன் கோகேயிக்கு பாராட்டுகள். அவருக்கும் இதற்காக அறவழியில் போராடிய சேவகர்களுக்கு ராமன் ஆசீர்வாதம் என்றும் கிடைக்கும். இந்த தீர்ப்பு வருவதற்குள் எத்தனை விமர்சனங்கள்?கூப்பாடுகள்?

ராமன் என்று ஒருவர் இருந்தாரா?ஆதாரமென்ன? அவர் செய்த செயல்களுக்கு ஆதாரமென்ன? தனுஷ்கோடியில் உள்ள அவர் த்ரேதாயுதத்தில் கட்டியதாகக் கூறப்படும் பாலத்தை கட்ட அவர் என்ன எஞ்சினீயரா? இப்படி அறிவுஜீவிகளின் கேள்விகள். உண்மையில் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு ஆதாரமில்லை. அவஸ்யமுமில்லை. ராமர் கோயில் ராமஜன்மபூமியில் கட்டப்படாமல் அரேபியாவிலா கட்ட முடியும். இன்னும் சிலர் மசூதி தகர்க்கப்பட்ட இடத்தில் மருத்துவமனை அல்லது நூலகம் கட்டலாம். இப்படி யோசனை.

இதில் வேடிக்கை பெரும்பாலான முஸ்லிம்கள் இதை எதிர்க்கவில்லை. அவர்களில் சிலர் வேண்டுமென்றே இதைத் திரித்து பிளவுபடுத்தினர். இன்னும் ஆச்சர்யம் இதை எதிர்த்தது வெளி நாட்டவர்கள் அல்ல. நம் நாட்டு அறிவுஜீவிகள்தான்.

சரி இந்த ராமர் யார்? மகா பெரியவா கூறுகிறார். ''ராமன் என்றாலே ஆனந்தமாக இருப்பவன் என்று அர்த்தம். மற்றவர்களுக்கு ஆனந்ததததைத் தருபவன் என்றும் பொருள். எத்தனை துக்கங்கள் வந்தாலும் மனம் சஞ்சலமடையாமல் ஆனந்தமாகத் தர்மத்தை அனுசரித்துக் கொண்டு ஒருத்தன் இருந்தானே என்றால் அது ஸ்ரீ ராமன்தான். வெளிப்பார்வைக்கு அவன் துக்கப்பட்டதாக இருந்தாலும் உள்ளுக்குள்ளே ஆனந்தமாக இருந்தான்.''

வேதவேத்யே பரே பும்ஸி எனும் ஸ்லோகத்தில் வேதவேத்யமான பரமபுருஷன் ராமனாக வந்த போது வேதமும் ராமாயணமாக வந்தது என்று ராமாயணத்தின் ஏற்றம் போற்றப்படும்.

தசரதராமனாக அவதரித்தவன் கல்யாணராமனாக, வீரராகவனாக, விஜயராகவனாக, பட்டாபிராமனாக பல ராமனாகத் தன்னைக் காட்டிக் கொண்டவன். ''ஆத்மானம் மானுஷம் மன்யே'' என்று சொல்லிக் கொண்டாலும் செய்தவை அனைத்தும் அதிமானுஷம்தான்.

எத்தனை மகான்கள் இப்பாரதத்தில் ராம நாமம் சொல்லி உய்ந்தனர். ராம நாமத்தை பரப்பினர். ராமாயணம் அடியொற்றி எத்தனை நூல்கள், எத்தனை காவ்யங்கள்? ஜீவரஸம் உள்ள ஒரு நாமம் அல்லவா/அது. இந்த நாம ஜபம் எடுத்துக் கொண்டு எத்தனையோ பேர் இன்னும் மேல் நிலைக்கு சென்றுள்ளார்கள். பல இடங்களில் ராம நாமம் எழுதி அதையே கோவிலாக ஆக்கியுள்ளார்கள். வட நாட்டில் துளஸி ராமாயணம் தெரியாதவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவ்வளவு ஏற்றம். ''கற்பார் ராமனை

அல்லால் மற்றும் கற்பரோ'' என்று நம்மாழ்வாரும்

''மும்மைசால் உலகத்து மூலமந்திரத்தை'' என்று கம்பரும் போற்றிய ராம நாமம்.

அவர் எப்படி இடர்களை கடந்து வெற்றி வாகை சூடினாரோ அப்படியே இந்த ராமஜன்மபூமி விவகாரமும் பல தடைகளைக் கடந்து வெற்றி அடைந்துள்ளது. நாம் செய்த பாக்யம்.

இதுபற்றி முதலில் யோசிக்கவில்லை. திடீரென்று சிறப்பிதழுக்கான விஷயமாக ஸ்புரித்தது. எனவே இந்த ஏப்ரல் இதழை ராமாயணச் சிறப்பிதழாகக் கொண்டுவர தீர்மானித்தோம். சில சிறப்பான தொகுப்புகளை தந்திருக்கிறோம். வாசகர்கள் ரசித்துப் படிக்க வேண்டும் என்று கூறி ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய் ஸ்ரீராம் ஜய் ஸ்ரீராம் ஜய் ஸ்ரீராம்.

வாசகர்கள் மறக்காமல் சந்தா தொகையை செலுத்துமாறு வேண்டுகிறோம். உங்கள் நண்பர்களை ப்ரதீபத்தின் சந்தாதாரராக சேர ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### நடப்பு நிலையிலிருந்து அத்வைதத்துக்கு



ஆசார்யளுக்கு நம் அவல நிலை தெரியாததில்லை. அவர் பரம கருணாமூர்த்தி, அத்வைத பாஷ்யமும், ப்ரகரண க்ரந்தங்களும் மட்டும் நமக்கு ப்ரயோஜனப்படாது என்று ஆசார்யாளுக்குத் தெரியும். ஆனதினால், அவர் அறிவிலும், அநுபவத்திலும் எவரெஸ்டாக இருந்தாலும், அந்த உச்சியிலிருந்து ரொம்பவும் இறங்கி நாம் இருக்கிற லெவலுக்கு வந்து நம்மைக் கைப்பிடியாக அழைத்துக் கொண்டு ஒவ்வொரு படியாக மேலே போகிறார்.

மனஸை நிற்கப் பண்ணுவதற்குப் பூர்வாங்கமாக, அதை நாலா திசையிலும் வெறி நாய் மாதிரி ஓடிக் கொண்டிருக்காமல் முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு அவரவரும் ஸ்வதர்மப்படி கர்மா செய்து கொண்டே இருக்க வேண்டும். நமக்கென்று ஆசை. த்வேஷம் இல்லாமல், லோகோபகாரமாக நமக்கென்று வாய்த்திருக்கிற கர்மாவை அவரவரும் பண்ணிக் கொண்டிருப்பது சித்த சுத்தியைத் தரும் என்பதால் ஆசார்யாள் கர்மாநுஷ்டானங்களை நம் எல்லோருக்கும் விதித்திருக்கிறார். 'கர்மா' என்பது ஓரளவுக்கு மனஸை மறந்து செய்கிற கார்யம். வேலையிலேயே நம் குறி இருப்பதால் சித்தம் தறி கெட்டு ஓடிக் கொண்டிருக்காவிடாமல் பண்ணுகிறோம். இம்மாதிரி மனஸை மறந்து (Ignore பண்ணி) கார்யம் பண்ணுவதோடு, அதை நல்லதிலேயே பழக்கி, முழுக்கி, ஒருமுகப்படுத்த வேண்டும். மனஸுக்கு ஐகாக்ரியம் (ஒருமுகப்படுதல்) ஏற்பட ஏற்படத்தான் அது அடங்கி, அப்படியே ஆத்மாவில் கரைந்துவிட வழி உண்டாகும். இதற்காகத்தான் அத்தனை நல்லதும் சேர்ந்ததான, ஸகல கல்யாண குண நிலயமான, ஸகுண மூர்த்தியிடம் பக்தி உபாஸனை செய்ய வேண்டும். மனஸ் அப்படியே ஆனந்தத்தில் ரொம்பி அந்த மூர்த்தியிடம் ஒருமுகப்பட்டு நின்றுவிட்டால் அப்புறம் கண்ட கண்டபடி ஓடாது. அந்த இஷ்டமூர்த்தி ஒன்றிடமே பதிந்து நிற்கும். பிறகு அந்த மூர்த்தியின் அநுக்ரஹத்தால், இப்படிப் பிரிந்திருந்து அதன் குணங்களை அநுபவிப்பது என்றில்லாமல், அதற்கும் மேலே போய், அதிலேயே கரைந்து நிர்குணமான பிரம்மமாக ஆகிவிடலாம்.

# ஆதிசங்கரரின் பக்தித் துளிகள்



இதற்காகத்தான் ஆசார்யாள், கர்மாநுஷ்மானம் மாதிரியே பக்தி உபாஸனையையும், நம்மெல்லோருக்கும் விதித்திருக்கிறார். விதித்தது மட்டுமில்லை – எப்படி பக்தி பண்ணுவது, எப்படி ப்ரார்த்தனை பண்ணுவது என்றே நமக்குத் தெரியவில்லை அல்லவா? இதை நமக்குச் சொல்லிக் கொடுக்கிற மாதிரி அவரே ஸகல தெய்வங்களின் மீதும் நெஞ்சை உருக்குகிற அநேக ஸ்தோத்ரங்களைச் செய்து நமக்கு அநுக்ரஹித்திருக்கிறார்.

அம்பாள் மேல் ஆசார்யாள் செய்த "ஸௌந்தர்ய லஹரீ", ஈச்வரன் மேல் பண்ணின "சிவாநந்த லஹரீ" இரண்டும் நூறு நூறு ச்லோகம் கொண்டது. இவ்வளவு பெரிதாக இல்லாமல் சின்னச் சின்னதாகவும் ஒரு தெய்வம் மிச்சமில்லாமல் – யார் யாருக்கு எது இஷ்ட தெய்வமானாலும் அதை அவர்கள் மனஸ் உருகி ஸ்தோத்ரம் பண்ணி அந்த இஷ்ட மூர்த்தியின் அநுக்ரஹத்தைப் பெறுகிற மாதிரி – நிறைய ஸ்தோத்ரங்கள் பண்ணியிருக்கிறார்.

இவற்றில் சிலவாவது நம் எல்லோருக்கும் மனப்பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும். ரொம்பவும் உசந்த தத்வங்களையும், உள்ளத்தைத் தொடும்படியான ரஸங்களையுங் கூடப் பரம லலிதமான, ஸுலபமான வாக்கில் கொடுப்பதே ஆசார்யளின் பெருமை. அறிஞர்களும், நன்றாக யோசித்து யோசித்தே புரிந்து கொள்ளக்கூடியதான ஸூக்ஷ்மமான கருத்துக்களைக் கொடுத்து அத்வைத பாஷ்யம் பண்ணினவரே சின்னக் குழந்தைகூட ருசித்துச் சொல்லி ப்ரயோஜனம் அடையும்படியான ஸ்தோத்ரங்களைச் சின்னதும் பெரிதுமாக, ஏராளமாக அநுக்ரஹம் செய்திருக்கிறார்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## எண்ணித் துணிக கருமம்

***கடமையாயினும் சிந்தித்துச் செயல்படுதல் நல்லது. பின் விளைவைப் பற்றி சிந்தியாமல் செயல்படுவது பின் வருந்தச் செய்யும்f***



தமனர் என்ற முனிவர் தன் மனைவி நடத்தை பிசகியவளெனக் கண்டார். அவளை வெட்டிக் கொல்லும்படி ஸாதுகாரி என்ற தன் மைந்தனை பணித்துவிட்டு மனம் அமைதி பெறத் தவம் செய்யச் சென்றார். ஸாதுகாரி தந்தை சொல்லை வேத வாக்காக மதிக்கின்றவன். ஆனால் இயல்பிலேயே அவன் எதனையும் உடன் செய்ய மாட்டான். ஆர அமர, உண்மை நிலை, காலம், இடம், பின் விளைவு இவற்றை ஆலோசித்துத் தன் உள்மனம் செய்வதைச் சரியானதென ஏற்ற பிறகே செய்வான். அதனால் அவனை மந்தன், சோம்பேறி என்று பிறர் நிந்திப்பது உண்டு. அதனை அவன் பொருட்படுத்துவதில்லை. செய்து முடித்தபின் செய்தது தவறானதெனக் கண்டால் பின் வருந்த நேரும். பின் வருந்துவதால் பலனேதுமில்லை. விளைந்ததை மாற்ற முடியாமல் போகும். அவன் இதை உணர்ந்தவன். சிறந்த தீர்க்கதரிசி. அதனால் எதனையும் சிந்தித்துச் செய்வான். செய்வதைத் திருந்தச் செய்வான்.

இன்று அவனுக்குத் தந்தை இட்ட உத்தரவு அவனைப் பெருத்த சிக்கலில் நிறுத்தியது.

ஒருபுறம் தாய் தன்னைப் பெற்றெடுத்தவள். அன்புடன் வளர்த்து ஆளாக்கியவள். அன்பே உருவான அவளைக் கொல்வது எப்படி? மறுபுறம் தெய்வமே உருவான தந்தை நற்பண்புகளின் இருப்பிடம். தவம் மிகுந்தவர். தாய்க்கும் அவரே தலைவர். அவரது பிள்ளையான தனக்கு அவரை எதிர்த்திட இயலாது. அவர் தனக்குக் கல்வியைப் போதிக்கத் தொடங்கியதும் இரு கட்டளைகளை இட்டார். 'பாறை போன்று கடமையில் உறுதியுடன் இரு. கோடரி போன்ற இடையூறுகளை வெட்டு ஒன்று, துண்டு இரண்டு எனப் பிளந்துவிட்டு முன்னேறுவாய்' என்றார். இன்று தந்தை சொல்லை நிறைவேற்றுகின்ற கடமையை நிறைவுறச் செய்கின்ற நேரம் வந்து விட்டது. தாயாரைக் கொல்வது மகாபாதகம். ஆனால் தந்தை சொல்வதை மீறுவதும் மகாபாதகமே. இரண்டில் ஒன்றைச் செய்துதான் ஆக வேண்டும். தாயாரைக் கொல்லாவிடில் தந்தையை அவமதித்ததாகும். கொன்றால் தாயைக் கொன்ற பாதகம். எது சரி? சிந்தித்தான்.

மனம் தெளியாததால் செயலில் ஸாதுசாரி இறங்கத் தயங்கினான். தமனர் தவத்திற்குச் சென்று கொண்டிருந்தார். தன் மனைவி நடத்தை பிசகியதை அவரால் ஏற்க முடியவில்லை. நம்பகமானவர் சொன்னதால் அவநம்பிக்கைப்படவும் தோன்றவில்லை. மனக்குழப்பத்தால் நடுவழியிலேயே திரும்பித் தன் ஆசிரமம் வந்து கொண்டிருந்தார். வழியில் தன் சீடர்கள் இருவர் இவரைக் கவனியாமல் பேசிக் கொண்டே சென்றனர். குரு அருகில் இல்லாததால் குருவின் மனைவியிடம் சென்று வணங்கியதையும் குருவின் மனைவி தன்னைப் புதல்வனாக மதித்து உணவிட்டனுப்பியதையும் ஒருவன் மற்றவனிடம் விவரமாகக் கூறி அந்தத் தாயின் அன்புள்ளத்தைப் பாராட்டினான். இந் நிகழ்ச்சியைக் கண்ட மற்றொருவர் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு முனிவரிடம் தெரிவித்ததால், முனிவர் இதனைத் தீர விசாரித்தால் மேலும் அவமதிப்பிற்கு உள்ளாக்கும் என நினைத்து, ஸாதுகாரியிடம் தாயைக் கொல்லப் பணிக்க நேர்ந்தது. சீடர்கள் பேசியதைக் கேட்ட முனிவருக்கு உண்மை துலங்கியது.

தந்தை சொல்லைத் தட்டாத தன் தனயன் இதுகாறும் மனைவியைக் கொன்றிருப்பானோ? ஒரு பாவமும் அறியாதவளைக் கொல்வதற்கு ஆணையிட்டோமே? தீர விசாரியாமல் கொடுஞ்செயலைப் புரிய முனைந்த தன்னை நொந்து கொண்டே ஆசிரமம் வந்த முனிவர் தன் தாயின் எதிரில்

கத்தியைப் பிடித்துக் கொண்டு தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருந்த ஸாதுகாரியைக் கண்டார். கட்டி அணைத்து முத்தமிட்டார். 'தந்தையை ! இதோ தங்கள் ஆணையை நிறைவேற்றுகிறேன்!' 'என்றெழுந்த புதல்வனை அடக்கினார். மகனே! தீர ஆலோசித்துச் செயல்படுகின்ற உன் பண்பு இன்று பெரும்பாதகச் செயல் நிகழாமல் தடுத்து நம் அனைவரையும் காப்பாற்றியுள்ளது.' கோபம், தன்மானம், துரோகம் இவற்றின் வசப்பட்டுச் செய்யும் செயலனைத்தும் நம்மை வீழ்த்திவிடும். மனம் ஏற்றுக் கொள்ளாததை சூழ்நிலை நிர்பந்தத்தால் செய்வதும், விரும்பத்தகாத பலனைத்தரும். கடமையைச் செய்யும்போதுகூட காலத்தையும், தேசத்தையும், சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு மனம் தெளிந்து செயல்படுவதே விரும்பிய நல்ல பலனைத் தரும். தீர விசாரித்துச் செயல்படும் உன் சிறந்த பண்பே இன்று நம்மைக் காப்பாற்றியுள்ளது எனப் பாராட்டினார்.'

## ஸனாதன தர்மப்புதிர்கள் மார்ச் விடைகள்

1. கோகர்ணம்
2. வீரட்டானீஸ்வரர்
3. எட்டு
4. ஸந்த்யா நிருத்யம்
5. மூன்று
6. பரசுராமர்
7. நேபாலம் (காரகோரம்)
8. தூப்புல்
9. மூர்தி நாயனார்
10. அக்ரஹாரம்


## ஸனாதன தர்மப்புதிர்கள் ஏப்ரல் வினாக்கள்

1. பாம்புகளைக் கொன்று திரிந்த ரிஷி ?
2. அம்மனின் வீரசக்தி பீடம் ?
3. துலஸீ ராமாயணப்பாக்கள் எப்படி அழைக்கப்படும் ?
4. மதுரையின் சிலம்பாறு வேறு பெயர் என்ன?
5. ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெருமாளின் சயனக்கோலத்தின் பெயர் என்ன?
6. தஞ்சை பெரிய கோயில் எவ்வாகமத்தைப் பின்பற்றும்?
7. தக்ஷிணமேரு எக்கோவிலுக்குப் பெயர்?
8. தஞ்சைக் கோவிலுக்குத் தொடர்புடைய சித்தர் ?
9. மகா நதி உத்பத்தி ஸ்தானம் ?
10. வசிஷ்டரின் இன்னொரு பெயர் ?

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சாஸ்திரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வேத வித்யார்த்திகள் சங்கமம் நிகழ்ச்சியில் வழங்கிய அனுக்ரஹபாஷணம்



இங்கே நிறைய வேத பாடசாலை இருக்கிறது. ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், இப்படி வெவ்வேறு சாகைகளை, வேத சாகைகளை அத்யயனம் செய்வதற்காக நீங்கள் எல்லோரும் வந்திருக்கிருக்கிறீர்கள். உங்களுக்கெல்லாம் அத்யயனம் செய்து வைக்கிற வாத்தியார் எல்லோரும் வந்திருக்கிறார்கள். இந்த பாரத தேசத்தில், வித்யைக்கு ஒரு முக்கியமான இடம். படிப்புக்கு, knowledge முக்கியமான இடம்.

**பிரயோஜனம் அனுத்திஸ்ய மந்தோபி ந பிரவர்த்ததே**

பிரயோஜனம் என்பது ஒன்று நமக்கு ப்ரயோஜனம் இருக்கவேண்டும். அல்லது ஊருக்கு ப்ரயோஜனம் இருக்கவேண்டும். அப்படி ஊருக்கு மிக உயர்ந்த பிரயோஜனத்திற்காக நீங்கள் படித்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதை நீங்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ செய்கிறீர்கள். ஆனால், நீங்கள் செய்வது மிக உயர்ந்த விஷயம்.

இந்த ஆஞ்சநேய ஸ்வாமிக்கு நிறைய சக்தி உண்டு. நிறைய படிச்சவர். நவ வியாகரண வித்தகர். சமயோசிதமாக பேசக்கூடியவர். மூன்று வேதங்களை கற்றவர்களுக்கு என்னென்ன திறமை உண்டோ அந்த அளவிற்கு திறமை படைத்தவர் ஹனுமான் என்று ராமரே பாராட்டுகிறார். ஆஞ்சநேய சுவாமிகளைப் பற்றி நிறையச் சொல்லலாம். அப்படிப்பட்ட ஒரு திறமையை, புத்திசாலித்தனந்தைப் பற்றி சொல்லும் போது, இந்த மூன்று வேதங்களும் படித்து இருந்தால்தான் அப்படி இருக்க முடியும் என்று சொல்கிறார் என்று சொன்னால், அந்த வேதம் படிப்பதன் முக்கியத்துவம், வேதம் படிப்பதனால் வரும் லாபம் எந்த அளவு என்பது புலனாகிறது. இந்த வேதம்

படிப்பதனால் திறமை வளர்கிறது, நல்ல குணங்கள் வளர்கிறது. நீங்கள் நம்பிக்கையோடும், மரியாதையோடும், ப்ரியத்தோடும் வேதம் படித்தால் நல்லது, புண்ணியம். வேதம் படிப்பது என்பது ஸ்வதர்மம்.

**பிராம்மணேன நிர்ஷ்காரணேன ஷடங்கோ வேதோ அத்யேயச்ச ஞேயேயச்ச**

ஏழெட்டு வயதிலே உபநயனம் பண்ணிக்கொண்டு, வேத அத்யயனம் செய்வது, தானம் பண்ணுவது, தானத்தை ஏற்பது, ஹோமங்கள் செய்வது, யாகங்கள் செய்வது, யாகத்தை செய்விப்பது. இந்த ஆறு கர்மாக்களையும், பிராமணாள், பரம்பரை பரம்பரையாய் செய்து கொண்டு வருகிறார்கள். அதிலே, வேதாத்யயனம் என்பது முக்கியம்.

எது நமக்கு ஞானத்தைக் கொடுக்கிறதோ, அது தான் படிப்பு என்று சொல்லுவார்கள். அந்தப் படிப்பு எப்போது வரும் என்றால், தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்க வேண்டும். **அக்னிமீளே ப்ரோஹிதம் என்று ஆரம்பித்து ஊர்ஜேத்வா - வாயவஸ்த - உபாயவஸ்த - தேவோவ: ஸவிதா - ப்ரார்ப்யது - ஸ்ரேஷ்டத மாய கர்மணே-**ஸ்ரேச்டதமான வேலையை, வேதாத்யயனம் பண்ணுவது என்பது ஸ்ரேஷ்டதமான, மிக உயர்ந்த வேலை. அந்த வேலையை தொடர்ந்து பண்ணிக்கொண்டு இருக்க வேண்டும். தொடர்ந்து செய்யும் போது, அந்த **ஸா வித்யா யா விமுக்தயே** -என்கிற அந்த வித்தையை கிரகணம் பண்ண முடியும். சிக்ஷா, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்பம் - ஆகிய வேதத்தின் அங்கங்களைப் படிக்க வேண்டும். அதற்குப்பிறகு தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸம் , வேதாந்தம், யோகம், சாங்க்யம்- ஆகிய சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும். அந்த மாதிரி துக்கத்ரியாதி காதா- ஆதி பௌதிகம் , ஆதி தெய்விகம், ஆத்யாத்மிகம் என்கிற மூன்று விதமான கஷ்டத்திலே இருந்து நாம வெளியிலே வருவதற்கு இந்த தத்துவக் ஞானம் வரணும். அதற்காக சாஸ்திரங்கள் எல்லாம் படிக்கணும். பாஷ்யங்களைப் படிக்க வேண்டும். வித்யாரண்ய சுவாமிகள் எழுதியுள்ள பாஷ்யங்களைப் படிக்க வேண்டும். பாராயணங்கள், ஸூர்ய நமஸ்காரம் அதற்கெல்லாம் அர்த்தம் தெரிய வேண்டுமானால் வித்யரண்யா சுவாமிகளின் பாஷ்யம் படிக்க வேண்டும். இதை எல்லாம் படித்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லாம் சொல்ல முடியும். சோம யாகம், வாஜபேயம்-இதைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அனுஷ்டானம் பண்ணத் தெரிந்தவர்கள் அனுஷ்டானம் பண்ணலாம். இந்த மாதிரி வேதத்தை முழுவதும் படிக்கும் போது, ஆனால், முழுக்கப் படிப்பதற்கு முன்னாடி, இந்த சம்ஹிதா என்ற மூலத்தை புஸ்தகம் பார்க்காமல் ஸ்பஷ்டமாக च ज छ ट ढ झ

என்னென்ன அக்ஷரங்கள் இருக்கிறதோ, எல்லாவற்றையும் சரியான அழுத்தம் திருத்தத்தோடு, நல்ல உச்சாரணம் முக்கியம். உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், மொத்தம் மூணு வகை உள்ளது. மூன்று ஸ்வரங்கள் உள்ளது. அந்த ஸ்வரங்கள் பிரகாரம் இந்த வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். வேத அத்ய்யனத்தின் போது ஆவர்த்தி சொல்ல வேண்டும், வாத்யார் பார்க்காத போதும் சொல்ல வேண்டும். அதே மாதிரி, காலை எழுவது என்பது முக்கியமான விஷயம். வாத்தியார் எழுப்புகிறாரோ இல்லையோ நீங்களாக எழுந்து படித்தல் வேண்டும். அதேமாதிரி நல்ல ஆகாரமாக சாப்பிட வேண்டும். உடம்புக்கு ஒத்துக்க கூடிய ஆகாரங்கள். புத்தி சக்தியை வளர்க்ககூடிய ஆகாரங்கள் உட்கொள்ள வேண்டும். இதெல்லாம் ஒரு சிறந்த வித்யார்த்தி உருவாவதற்கான படிநிலைகள். முன்னரே கூறியபடி நீங்கள் மிகவும் உத்தமமான உயர்ந்த வேலையை செய்து வருகிறீர்கள். அதை தொடர்ந்து உற்சாகமாகவும் உத்வேகமாகவும் செய்யவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

ஜெய ஜெய சங்கர , ஹர ஹர சங்கர


॥ ஸ்ரீ: ॥

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.

பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை

Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி

எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.

க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்

எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.

(Transliteration in all Languages done here.)

Grantham to Devanagiri, Grantham to Tamil,

மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்

உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்

அச்சிட்டு தரப்படும்.

Contact : V.K.N. Enterprises (Printer)

Mylapore, Chennai - 600 004 Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ப்ரஹ்லாத சரித்திரம்

ஸ்ரீமத் பாகவத சுலோகங்கள் அடிப்படையில்

48. **இரணியன் :** அசுரர்களே ! திசையானைகளைப் போகவிடுங்கள். நெருப்பை மூட்டுங்கள். காற்றுடன் கூடிய நெருப்பே ! நீ இந்த பாபியான ப்ரஹ்லாதனை கொளுத்துவாயாக!

49. **ப்ரஹ்லாதன் :** தந்தையே இந்த நெருப்பு காற்றோடு கலந்தாலும்! என்னை கொளுத்தாது அப்பா ! தாமரை இதழ்களினால் பரப்பப்பட்டதாய் எல்லா திசைகளிலும் குளுமையாக அல்லவா இந்த அக்னி உள்ளது.

50. **ஹிரண்யகசிபு :** ப்ரஹ்லாதா ! நல்ல பெருமையுடையவன் நீ. அதனால் தான் இந்த செயல் முடிந்தது. இந்த மந்திரசக்தி உனக்கு உண்டானது ஸஹஜம். ஏனெனில் கடுந்தவம் புரிந்த என் மகனல்லவா நீ.

51. **ப்ரஹ்லாதன் :** இது மந்திரசக்தியினால் அல்ல. எனக்கு மந்திரத்தோடு ஸம்பந்தமும் கிடையாது. இச்செயல்கள் எல்லாம் அச்யுதனிடம் அசையா பக்தியுள்ளவர்களுக்கு மிகமிகச் சாதாரணமானவை.

மேலும் ப்ரஹ்லாதன் சில உண்மை வைணவ இலக்கணங்களையும் சொன்னான்.

52. தனக்கு ஒரு பாபமும் நேரக்கூடாது என்று நினைப்பது போல, மற்றவர்களுக்கும் நாம் பாபச் செயல் புரியக் கூடாது என்ற எண்ணம் உள்ள ஒருவனுக்கு பாபம் ஏற்படக் காரணம் எது?

53. எவன் ஒருவன் மனதால், வாக்கால், செயலால் மற்றவர்களுக்குத் தீங்கு நினைக்கிறானோ அந்த மனிதனின் வாழ்வில் அசுபங்கள் பலனளிக்கின்றன.

54. எனவே, யான் யாருக்கும் தீங்கு செய்ய விரும்பவில்லை, செய்வதில்லை, ஏன் தீய சொற்களைப் பேசுவதும் இல்லை. காரணம் எல்லா உயிர்களிடத்தும் பகவான் இருக்கிறான் என்ற சிந்தனையால்.

55. தன் உடல், மனம், துக்கம், தைவத்தால் தோன்றியவை. இருப்பவை அப்படியே எல்லாவற்றிலும் நல்லதையே காண்கின்ற எனக்கு எங்கிருந்து துக்கம் வரும்?

56. இதே போல எல்லா உயிர்களிடத்திலும் அன்பு வளருமேயானால் அன்பு காட்டுபவனுக்குத் துன்பம் எது? இதை உணர்ந்து நன்கு கற்றவர்கள் எல்லாப் பொருள்களில் ஹரியாகிய பகவானின் அம்சம் என்றே உணர வேண்டும்.

57. **ஹிரண்யகசிபு :** மந்தபாக்யமுள்ளவனே! என்னையல்லாது வேறு ஓர் ஈச்வரன் இருக்கிறான் என்றால் யார் அவன் எங்கிருக்கிறான். இருப்பது உண்மை என்றால் இந்தத் தூணில் ஏன் காணப்படவில்லை?

58. எனவே இப்படியெல்லாம் சொல்கின்ற ப்ரஹ்லாதா ! சரீரத்தினின்று தலையைக் கொய்வேன். அவனை (பகவான்) சரணமடைய விரும்பும் உன்னை அந்த ஹரி காப்பாற்றட்டும்.

59. இப்படி எல்லாம் கோபத்தால் அடிக்கடி கெட்ட சொற்களினால் மிகப் பெரியவனான (இறைபக்தன் ப்ரஹ்லாதன்) இறையடியவனை கொடிய அசுரன் கத்தியை எடுத்துக் கொண்டு தன் சிம்மாசனத்திலிருந்து தூண் பக்கம் சென்று, தன் பலம் கொண்ட முட்டியினால் கம்பத்தை அறைந்தான்.

60. அவன் தட்டியபோதே அத்தூணினின்று பயங்கரமான ஒலி (சப்தம்) தோன்றியது. அதனால் அவன் அண்டமெல்லாம் எதிரொலி உண்டாயிற்று. அதனால் அந்த அசுரன் தன் அறியாமை (தன் பிடிவாதத்தால் உண்டான) உணர்ந்து தன் இடம் சென்றான்.

61. தீயை அலட்சியப்படுத்தி, அதில் விழும் விட்டில் பூச்சி போல, தூணில் இருக்கிறானா என்று சொல்லுகின்ற ஹிரண்யன் முன்னால், எம்பெருமான் கதையை ஆயுதமாய் உடையவன், சிரித்த ந்ருஸிம்ஹனாக அந்த அசுரயானையின் முன் தோன்றினான்.

62. இப்படி எம்பெருமானை எதிர்த்து குரலிட்டு கதையுடன் வந்த ஹிரண்ய கசிபாம் யானையை, நரஸிம்ஹன் எதிர்கொண்டு கருடன் நாகத்தைப் பற்றுவது போல் பற்றி, தன்மடியின் மீது அமர்த்தி மண்டபத்தின் வாயிற்படியில் தம்முடைய கைநகங்களினால் அழித்தான்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 5

பி. ஆர். கண்ணன்

## ஸ்கந்தம் 2

### மகாபாரதம்



இங்கு மகாபாரதக் கதையைச் சுருக்கமாக வியாஸ பகவான் அருளுகிறார். ஸத்தியவதியின் ஆரம்ப கதையைச் சொல்லுங்கால், உபரிசரர் என்ற வஸூவிற்கும், அத்ரிகா என்ற அப்ஸரஸிற்கும் பிறந்த மத்ஸ்யகந்தா என்ற பெண்ணை ஒரு மீன் வயிற்றிலிருந்து எடுத்த தாஸராஜன் தன் பெண்ணாக வளர்த்தது, பராசர முனிவரின் அருளினால் மீன் வாசனை பொருந்திய அப்பெண் யோஜனகந்தா என்ற ஸுகந்தம் வீசும் பெண்ணாக மாறி, கிருஷ்ணத்வைபாயனர் என்கிற வியாஸரைப் பெற்றெடுத்தது; வியாஸர், தாயார் ஸ்மரித்தபோது தான் வருவதாகச் சொல்லி தபஸிற்குக் கிளம்பியது எல்லாம் கூறுகிறார். அதேபோல, இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த மகாபிஷன் என்ற ராஜா பிரம்மதேவரின் சாபத்தினால் பூமியில் **சந்தனு** மகாராஜாவாகப் பிறந்தது, கங்கையும் அவ்வாறே சாபத்தினால் பூமியில் பெண்ணாகப் பிறந்தது, அவர்களுக்கு விவாகம் ஆகி, முதல் ஏழு புத்திரர்களை கங்கை ஆற்றில் முழுகடித்துச் சாகடித்ததைச் சொன்னார். எட்டாவது புத்திரனைக் கொல்வதை சந்தனு தடுக்கவே, கங்கை சந்தனுவிடமிருந்து பிரிந்துபோய், அப்புத்திரனை நல்ல வீரனாக வளர்த்து, பின்னர் சந்தனுவிடம் ஒப்படைக்கிறாள். அப்புத்திரன் பெயர் **ஸத்தியவ்ரதன்**. தன் குழந்தைகளைப் பிறந்தவுடனேயே கொல்வது என்ற பயங்கரமான செயலை கங்கை செய்யக் காரணம், அந்த எட்டுபுத்திரரும் முற் பிறவியில் அஷ்டவசுக்களாகத் திகழ்ந்தபோது, வஸிஷ்டர் ஆசிரமத்திலிருந்து நந்தினி என்ற தேவலோகப்பசுவைத் திருடினர். வஸிஷ்டர், அப்போது ஆசிரமத்திற்கு திரும்பியவர், அவர்களை பூமியில் பிறக்குமாறு சபித்தார்.

பின்னர் அவர்கள் பிரார்த்தனையின் பேரில், அவர்களில் ஏழு பேர் பூமியில் பிறந்து உடனேயே உடலை நீத்து பழைய வசு பதவிக்கு திரும்பவும் வரலாம் என்றும், எட்டாவது வசு பசுவைக் களவாடிய குற்றத்தைத் தானே செய்ததால், பூமியில் வெகுகாலம் தங்கவேண்டும் என்றும் விதித்தார். இதனால் தான் கங்கை பரம கருணையினால் தன் ஏழு குழந்தைகளைப் பிறந்தவுடனேயே, மரணத்திற்காளாக்கினாள். எட்டாவதான ஸத்தியவ்ரதனை பிதாவிடம் ஒப்படைத்தாள்.

ஒரு சமயம் சந்தனு மத்ஸ்யகந்தாவைப் பார்த்து ஆசைப்பட்டு அவளை விவாகம் செய்ய எண்ணி, அவள் பிதா தாஸராஜனிடம் கேட்க, தாஸராஜன் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு ராஜ்யம் கிடைக்க வாய்ப்பில்லை, காரணம், ஏற்கெனவே, மூத்த புத்திரன் ஸத்தியவ்ரதன் இருப்பதால் என்றான். சந்தனு ஆழ்ந்த துக்கத்திலிருப்பதைப் பார்த்துக் காரணம் கேட்ட ஸத்தியவ்ரதனுக்கு சந்தனு சரியான பதிலைச் சொல்லவில்லை. அப்போது தனயனின் கடமை என்கிற உயர்ந்த தர்மத்தை எடுத்துப் பேசினார் ஸத்தியவ்ரதன்: 'தந்தையின் கவலையைத் தீர்க்காத புத்திரன் இருந்து என்ன பயன்? ராமர் பிதாவின் வாக்கைக் காப்பாற்ற ராஜ்யத்தைத் துறக்கவில்லையா? பரசுராமர் பிதாவின் ஆக்ஞையின்பேரில் மாதாவையே சிரச்சேதம் செய்தார். ராஜா ஹரிஸ்சந்திரன் தன் வாக்கை நிறைவேற்ற மனைவி, புத்திரன் ஆகியோரை விற்றாரே?' என்று. தந்தை ஒன்றும் சொல்லாமலிருந்தும், ஸத்தியவ்ரதன் மத்ஸ்யகந்தாவின் விஷயத்தைப் பிறர் மூலம் அறிந்து, தாஸராஜனிடம் சென்று, பிற்காலத்தில் மத்ஸ்யகந்தாவிற்குப் பிறக்கும் குழந்தையே ராஜாவாகவேண்டும் என்கிற அவனுடைய நிபந்தனையைக் கேட்டறிந்தார். பிதாவின் ஆசையை நிறைவேற்றுவதற்காகவே, தத்க்ஷணமே, தான் விவாகமே செய்துகொள்ளப்போவதில்லை என்ற கடுமையான சபதம் இயற்றினார். பயங்கரமான சபதம் செய்ததால், ஸத்தியவ்ரதன் **பீஷ்மர்** என்று பெயர் பெற்றார்.

குந்திபோஜன் புத்திரியான **குந்தி,** தான் கன்னிகையாக இருந்தபோது, சூரியன் மூலமாகப் பெற்ற குழந்தையான கர்ணனை ஆற்றில் விடும் கட்டத்தில் தேவியிடம் பிரார்த்திக்கிறாள். அப்போது அவள் துக்கத்தை எவ்வாறு வெளிப்படுத்தினாள் என்றால், முந்தைய பிறப்பில் தேவியைத் தான் ஆராதிக்கவேயில்லை, தேவியின் பாதாரவிந்தங்களை தியானிக்கவேயில்லை; அதனால்தான் இந்த ஜன்மாவில் இப்பேர்ப்பட்ட கஷ்டம் நேர்ந்தது என்றாள். **பூர்வஸ்மிந்நபி ஜந்மநி த்ரிஜகதாம் மாதா ந சாராதிதா । ந த்யாதம் பதபங்கஜம் ஸுககரம் தேவ்யா: ஸிவாயாஸ்சிரம்।**

**(தொடரும்)**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 23

## நெமிலி எழில் மணி



நெமிலி என்னும் ஊர் அரக்கோணம் பாதையில் உள்ள ஓர் ஊர். இங்கு அம்மன் பாலையாக அருள் பாலிக்கிறாள். 1945 ஆம் வருடம் பெரியவா இங்கு வந்து தரிசனம் செய்தார்கள். அம்மனின் கோயிலுக்காக பணம் சேகரித்து கட்டடம் கட்டி வந்தோம். ஒரு மணி மண்டபமும் கட்டுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. பின்பு பல வருடங்களுக்குப்பின் ஒரு நாள் அம்மனுக்கு பூஜை செய்து கொண்டிருந்தபோது இஷ்டலிங்கம் என்பவர் வந்து தான் சிமெண்டுக்குத் தந்த பணத்தில் பாக்கி உள்ளது. அந்த பாக்கி பணமான 1000 ரூபாயை கொடுக்குமாறு கேட்டார். என் கையில் பணம் இல்லை.

இப்போது கையில் பணம் இல்லை மத்யானமாக வரச் சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்று மனைவியிடம் இதைச் சொன்னேன். கையில் பணம் இல்லாதபோது எப்படி மத்யானம் கொடுக்க முடியும் என்றாள். ஏற்கனவே கை வளையல் இன்னும் பல ஆபரணங்கள் இதையெல்லாம் வைத்து கடன்பட்ருக்கோமே உங்களுக்குத் தெரியாதா? என்றாள்.

நானும் யோசித்து ஏதோ சமாதனம் சொல்லலாம் என்று கூறி மீண்டும் கோவிலுக்கு வந்தேன்.

*சிறிது நேரத்தில் ஒரு கார் வந்தது. அதிலிருந்து தம்பதியர் வந்து அம்மனை தரிசனம் செய்தனர். நாங்கள் எப்போது காஞ்சீபுரம் வந்தாலும் பெரிவரைத் தரிசனம் செய்வோம் அவர்தான் எங்களுக்கு எல்லாம். இன்று காலை அவரைப் பார்க்கச் சென்றபோது '' நெமிலி பாலாபீடத்துக்குப் போயிருக்கயா?அங்க போய் அம்மனை தர்சனம் பண்ணு என்று கூறவே நாங்கள் வந்தோம் என்றனர். கற்பூர ஆரத்தி முடிந்தவுடன் காணிக்கையாக ஒரு கவரை வைத்துவிட்டு நமஸ்கரித்து சென்று விட்டனர். நான் எவ்வளவு மறுத்தும் இதை ஏத்துக்கணும் என்று கூறிவிட்டுப் போயினர். அவர்கள் போவதற்கும் இஷ்டலிங்கம் வருவதற்கும் சரியாக இருந்தது. என்னா சாமீ பணம் ரெடியா என்றார். எனக்கு வெலவெலத்துப்போயிற்று. கையில் பணமில்லை அப்புறம் பார்க்கலாம். ஒங்க எத்ர்ல போனாரே அவர் கவர்ல எதாச்சும் இருக்கும் பத்தோ இருபதோ இருக்கும் எடுத்துகங்க என்று கூறி அந்த கவரைப் பிரித்தேன். ஆச்சர்யம் சரியாக 1001 ரூபாய் இருந்தது. 1ரூபாயை அம்மன் பாதத்தில் வைத்துவிட்டு 1000ரூபாயை அவரிடம் தந்தேன். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பெரியவா வந்தது 1945 . 45 வருடங்கள் கழித்து ஒரு தம்பதியை அனுப்பி என் இடர் தீர்த்தார்அவர். அவளும் அவர்மூலம் என் இடர் தீர்த்தாள். அவரும் அவளும் வேறா? இல்லை . பாலா சரணம் போற்றி பெரியவா சரணம் போற்றி.*

இந்த மாதம் கொரனா பிரச்சனையின் காரணமாக
வரவிருந்த இராமாயண ம் சிறப்பிதழ் வர இயலவில்லை
என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஜீவனின் முட்டாள் தனம்

வறண்ட காட்டில் ஒரு வயதான மூதாட்டி விறகுளை வெட்டுவதற்காக சென்று, விறகுகளை வெட்டி அதனை கயிற்றால் கட்டினாள். பிறகு அதனை தன்னுடைய தலையில் சுமந்து நடந்து சென்றாள். எதிர்பாராத விதமாக தலையில் இருந்த விறகு சுமை தவறி விழுந்து விட்டது. அவள் பதறிக்கொண்டு இதனை யார் மீண்டும் என்னுடைய தலையில் எடுத்து வைப்பார், என்று எண்ணிக் கொண்டு மனதில் மிகவும் பக்தியோடு, ''கடவுளே என்னைக் காப்பாற்று என்று அழைத்தாள்.'' திடீரென்று கடவுள் அவள் முன் தோன்றி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்? அந்த மூதாட்டி கடவுளிடம், 'ஐயா தயவுசெய்து இந்த விறகு சுமையை என்னுடைய தலையில் வைக்க உதவ வேண்டும் என்று கூறினாள்.'

நம்முடைய நிலைமையும் இந்த வயதான மூதாட்டியின் செயலைப் போன்றே உள்ளது. நமக்கு நன்மை அளிக்கக்கூடியது என்று நாம் பிராத்திற்கும் செயல்கள் : ஆடம்பரமான வாழ்க்கை, கார், பங்களா, வங்கியில் சேமிப்பு என்று நம்முடைய பட்டியல் நீண்டுக்கொண்டே செல்கிறது. ஆனால் இவற்றினால் நாம் உண்மையான நன்மையை (ஆன்மீகமான) அடைய இயலாது.

பகவானிடம் நாம் பிறப்பு இறப்பு சுழற்ச்சியிலிருந்து விடுபடவும், இந்த மனித ஷரீரத்தில் எப்போதும் பகவானின் தொண்டில் ஈடுபடவும் மட்டுமே நாம் பிராத்தனை செய்ய வேண்டும். அதுவே உண்மையான பிரார்த்தனை.

இந்த ஜடவுலகில் பகவானின் கீதையில் கூறியபடி துக்காலயம், அசாஸ்வதம் (துன்பமயமான தற்காலிகமான) என்பதை எப்போதும் நாம் நினைவில் வைத்து பகவானின் தொண்டில் எப்போதும் ஈடுபட பிரார்த்திப்போம்.

## மகாகவி

# காளிதாஸரின் விஷ்ணு ஸ்துதி

ரகுவம்சம் 10ஆம் ஸர்கம்

**शब्दादीन् विषयान् भोक्तुम् चरितुम् दुश्चरम् तप: ।**
**पर्याप्तोसि प्रजा: पातुम् औदासीन्येन वर्तितुम् ।। १० ।।**

**சப்தாதீன் விஷ்யான் போக்தும் சரிதும் துச்சரம் தப: ।**
**பர்யாப்தோஸி ப்ரஜா;பாதும் ஔதாஸீன்யேவ வர்த்திதும் ।।**

*நீர் புலங்களை நுகர்ந்து அனுபவிப்பவராகவும் (க்ருஷ்ணாவதாரத்தில்) அதே புலன்களை அடக்கி தவம் செய்பவராகவும் இருக்கிறீர். (நர நாராயணாவதாரம்) பற்றற்று இருப்பவர் மக்களைக் காப்பது அறிது. ஆனால் நீரோ மக்களையும் காக்கின்றீர், பற்றற்றும் இருக்கிறீர். உம்மாலேயே இது ஸாத்யம்.*

**बहुधाप्यागमैर्भिन्ना: पन्थान्सिद्धेतव: ।**
**तवय्यैव निपतन्ति ओघा जाह्नवीया इवार्णवे ।। ११ ।।**

**பஹுதாப்யாகமைர்பின்னா: பந்தானஸித்திஹேதவ: ।**
**த்வய்யைவ நிபதந்தி ஓகா ஜான்வீயா இவார்ணவே ।।**

*ஆகமங்கள் பலவகையாகப் பிரிந்திருந்தாலும் பலன் தருவதற்கே காரணங்களாக உள்ளன. கங்கையின் ப்ரவாஹங்கள் கடலில் கலப்பது போன்று வழிகள் உன்னையே சேர்கின்றன.*

**त्वयिआवेशित चित्तानाम् त्वत्समर्पित कर्मणाम्**
**गतिस्त्वम् वीतरागाणाम् अभूय सन्निव्रुत्तये ।। १२ ।।**

**த்வயி ஆவேசித சித்தானாம் த்வத்ஸமர்ப்பித கர்மணாம் ।**
**கதிஸ்த்வம் வீதராகாணாம் அபூய:ஸன்னிவ்ருத்தயே ।।**

*உன்னிடத்தில் நிலை நிறுத்தப்பட்ட மனத்தை உடையவர்களும் உன்னிடத்தில் அர்ப்பணம் செய்யப்பட்ட கர்மத்தை உடையவர்களும் பற்றறவர்களுக்கு மோக்ஷஸாதனமாயிருக்கிறீர்.*

**प्रत्यक्षोपि आपरिछ्छेद्यो मह्यादिर्महिमा**

**आप्तवागनुमानाभ्याम् साध्यम् त्वाम् प्रति का कथा ।। १३ ।।**

**ப்ரத்யக்ஷோபி அபரிச்சேத்யோ மஹ்யாதிர்மஹிமா தவ ।**

**ஆப்தவாகனுமானாப்யாம் ஸாத்யம் த்வாம் ப்ரதி கா கதா ।।**

*கண்ணால் பார்க்கப்படுகின்றதாயினும் உமது பூமி முதலிய ஐஸ்வர்யம் அளவிட முடியாதது. எனின் வேதங்களாலும் அனுமானத்தாலும் அறியத்தக்க உம்மைக்குறித்து பேச்சு ஏது?*

**केवलम् स्मरणेनैव पुनासि पुरुषम् यत:**

**अनेन ब्रुतय: शेषा निवेदितफ्लस्त्वयि ।। १४ ।।**

**கேவலம் ஸ்மரணேனைவ புனாஸி புருஷம் யத: ।**

**அனேன வ்ருத்தய:சேஷா நிவேதிதபலாஸ்த்வயி ।।**

*நினைத்த மாத்ரத்தில் மனிதனை எக்காரணத்தால் தூயவனாகுகிறீரோ அந்த நினப்பின் மூலம் உம் விஷயத்தில் பிற தொழில்கள் தெரிவிக்கப்பட்ட பயங்களை உடையன. உம் நினைவே தூய்மையைக் கொடுக்குமெனின் உமக்குச் செய்யும் பூஜை, தொடுதல் போன்றவைகளால் வரும் பலன் அளவிடற்கரியவை என்பது தாத்பர்யம்.*

**उदधेरिव रत्नानि तेजाम्सीव विवस्वत: ।**

**स्तुतिभ्यो व्यतिरिच्यन्ते दूराणि चरितानि ते ।। १५ ।।**

**உததேரிவ ரத்னானி தேஜாம்ஸீவ விவஸ்வத: ।**

**ஸ்துதிப்யோ வ்யதிரிச்யந்தே தூராணி சரிதானி தே ।।**

*கடலின் ரத்னங்கள் போலவும் சூர்யனின் தேஜஸ் போலவும் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத உம்முடைய செயல்கள் தோத்ரங்களுக்கு மேற்பட்டன.*

**अनवाप्तमवाप्तव्यम् न ते किचिन्न विद्यते**

**लोकानुग्रहैवको हेतुस्ते जन्मकर्मणो ।। १६**

**அனவாப்தம் அவாப்தவ்யம் ந தெ கின்ஜின்ன வித்யதே**

**லோகானுக்ரஹ ஏவைகோ ஹேதுஸ்தே ஜன்மகர்மணோ: ।।**

*இதுவரை அடையப்படாதது அடையப்படவேண்டியதாக உமக்கு ஒன்றும் இல்லை. லோக அனுக்ரஹம் என்ற ஒன்றே உமது பிறப்பிற்கும் செயலுக்கும் காரணம்.*

*(தொடரும்)*

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

## 3. வானப்ரஸ்தம்

வாழ்வின் முதல் பகுதியை கல்வி அறிவு ஸம்பாதித்துக் கொள்வதில் பயனுள்ளதாக சிலவழித்து இரண்டாவது பகுதியை இல்வாழ்க்கையில் அனுபவித்து மூன்றாவது பகுதியில் இல்வாழ்கையில் ஏற்பட்ட குடும்ப சுமையை தனது வயது வந்த மகனிடம் ஒப்படைத்துவிட்டு மன அமைதி வேண்டி தவம் செய்ய கானகம் செல்லும் வாழ்க்கையை வானப்ரஸ்தம் என்பார்கள்.

அங்கனம் கானகம் செல்பவர் தனக்கு பணிவிடை செய்து தக்க துணையாக இருக்க மனைவி ஸம்மதம் தெரிவித்தால் அவளை மாத்திரம் அழைத்துக் கொண்டு கானகத்திற்குப் போகலாம். அங்கு ஏற்கனவே தவம் செய்து கொண்டிருக்கும் ரிஷிகளுடன் தங்கி அவர்களிடம் இருந்து தத்துவ உபதேசம் பெற்று அதற்குண்டான தர்ம வழியை கடைபிடித்து வாழ்ந்து வர வேண்டும். அப்படி வாழும் போது காட்டில் கிடைக்கும் காய்கறிகள், பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றைக் கொண்டு ஆகாரம் செய்து வாழ்க்கையை இறை சிந்தனையில் சிலவழிக்க வேண்டும். இங்கு வசிக்கும் குடும்பத்தைப் பற்றிய நினைப்பின்றி வாழ வேண்டும். இங்கு நான்காவது நிலையான ஸன்யாஸ நிலைக்கு தன்னை தபஸ் செய்து கொள்ள வேண்டும்.

காட்டில் உள்ள எல்லா பிராணிகளிடமும் அன்புடன் பழகி, யாவற்றையும் ஒரே நோக்குடன், பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். அங்கனம் இருக்க மிருகங்களும் பயமின்றி வானப்ரஸ்தரிடம் வந்து பழகும். இவர்கட்கும் மனதில் எந்தவித தீய எண்ணமும் எழாமல் மனம் இறை சிந்தனையினையே இருக்கும்.இந்த ஆசிரமம் கலியுகத்தில் இல்லை என்று சொல்வார்கள். ஆனால் இந்த வான ப்ரஸ்த வாழ்க்கையை வேறு வகையில் அனுபவிக்கும் முன்னாள் கிருகஸ்தர்கள் இப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

குடும்ப பாரத்தை தனது மகனிடம் ஒப்படைத்து விட்டு தாங்களே அந்த காலத்தில் தனித்து வாழ கானகம் சென்றார்கள். தற்காலத்தில் மகன்கள் தாய், தந்தையரை தங்களிடம் வைத்துக் கொள்ள மனம் ஒப்பாமல் முதியோர் இல்லங்களில் சேர்த்து விட்டு அவர்களை தனிமையில் வாழ விட்டு விட்டு, முதியோர் இல்லறத்திற்கான கட்டணத்தை கட்டி விடுகிறார்கள். சிலர் மகன்களிடம் அதனையும் எதிர்பார்க்காமல் தாங்களே முதியோர் இல்லங்களில் வந்து வாழ்கின்றனர். இதுவும் ஒரு வகையில் வானபிரஸ்தம் போன்றது தான்.

*பழைய காலத்து வானப் பிரஸ்தர்களில் நால்வகையினர் இருந்தனர். அவர்கள் முறையே 1. வைகானஸர், 2. ஔதும்பரர், 3. வால்கில்யர், 4. பேநபர் என்று அழைக்கப்பட்டனர்.*

***வைகானஸர் :*** *உழுது பயிரிடாமல் காட்டில் தானே முளைத்த பயிர்களில் தானியங்கள், பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றை ஆகாரமாகக் கொண்டு பஞ்ச மஹா யஞ்ஜங்களையும் தினமும் விடாமல் செய்தவர்கள். இவர்கள் விகனஸர் என்ற ரிஷியின் மதத்தைச் சார்ந்தவர்கள்.*

***ஔதும்பரர் :*** *காட்டில் விளைகின்ற தீவாரம் என்ற செந்நெல் மற்றும் பழங்களையும் புசித்துக் கொண்டு தினமும் பஞ்ச மஹா யஞ்ஞங்களை முறையாக தவறாமல் செய்து வருபவர். இவர் உதும்பரர் மதத்தைச் சார்ந்தவர்.*

***வால்கில்யர் :*** *தலையில் சடைதரித்து, இடையில் மான் தோல் உடுத்தி, ஔதும்பரரின் ஆகாரத்தை உண்டு பஞ்சமஹா யஞ்ஞங்களை தினமும் தவறாமல் செய்து வருபவர். இவர் வால்கியர் மதத்தைச் சார்ந்தவர்.*

***பேநபர் :*** *மரத்தில் இருந்து வீழ்ந்த உலர்ந்த சருகுகள், பழங்கள் இவற்றை ஆகாரமாகக் கொண்டு கானகத்தில் தான் விரும்பும் இடத்தில் வஸித்துக் கொண்டு தபம் செய்து கொண்டிருப்பவர் இவர்கள். பேநபர் மதத்தைச் சேர்ந்தவர். விகனஸர் என்பவர் ஒருவகையான துறவி என்கிறது அகராதி.*

*வால்கில்யர் என்பவர் ஒருவகையான தெய்வீக புருஷர் என்றும், இவர்கள் 60,000 பேர்கள் என்றும், இவர்கள் சூர்யனின் தேரில் முன்னால் செல்பவர்கள் என்றும் அகராதியில் உள்ளது. இத்தகைய வானப்ரஸ்தர்களை தற்காலத்தில் காண்பது அரிது என்பதால் தான் கலியுகத்தில் இவர்கள் ஆசிரமம் இல்லை என்று கூறினார்கள் போலும். இருந்தாலும் தற்போது முதியோர் இல்லங்களில் இருப்பவர்களை நவீன வானப்ரஸ்தர்கள் என்று கொள்ளலாம் என்று தோன்றுகிறது. இவர்கள் அடுத்த நிலையான துறவறத்திற்கு தங்களை தயார்படுத்திக் கொள்கிறார்களோ, இல்லையோ காலத்தின் கட்டாயத்தின் பேரில் இத்தகைய முன்னாள் நிலை மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது நிச்சயம்.இளைய சமுதாயம் இத்தயை வானப்ரஸ்த உயிர்களை உருவாக்காமல் முதியோர் இல்லங்களில் கொண்டு விட்டு அவர்களை கஷ்டப்படுத்தாமல் தங்களுடனே வைத்துக் கொண்டு அவர்களுக்கு தொண்டு செய்து நற்புண்ணியங்களை சம்பாதித்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. இந்த நிலை ஏற்பட இறைவன் அருள்வான் என ப்ரார்த்திப்போமாக. அடுத்த நிலையான ஸன்யாஸத்தைப் பற்றி அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.*

*(தொடரும்)*

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

## ஸீதைக்கு வந்த சாபம்

வாத்ஸ்யாய முனிவர் ''ஐயனே புத்திமானன ராமர் ஏன் ஒரு பாவம் அறியாத கர்பவதியான ஸீதையைத் துறந்தார்? ஸேஷனாகர் எல்லாம் விதி காலம் யாரை விட்டது. இதற்கு முக்ய காரணம் பறவைகளின் சாபம்.

வாத்ஸ்யாயர் அட அதுவென்ன?

சேஷனாகர் கதையைக் கேளும்.

மிதிலை ராஜ்யம். சீரத்வஜா் என்ற பெயர் கொண்ட ஜனக ராஜா தன் நாட்டை கண்ணும் கருத்துமாய் ஆண்டு வந்தார். ஒரு நாள் பூமியை உழும்போது அதில் புவிக்கே அணியாய் ஒரு பெண் மகவு இருந்ததைக் கண்டு உவகை எய்தினார். அக்குழந்தையை சீரும் சிறப்புமாய் வளர்த்து வந்தார். அவளுக்கு ஸீதை எனும் பெயர் சூட்டினார். அவளும் வளர்ந்து வாலிப வயது அடைந்தாள்.

ஒரு நாள் அரண்மனைத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில் மைதிலியான அவள் இரு பறவைகள் மரமொன்றில் இனிமையான கானத்தை பாடிக் கொண்டிருந்தன. ஏய் பார் இவ்வுலகம் ராமன் என்னும் அரசனைப் பார்க்கப் போகிறது.

அவனுடைய மனைவி ஸீதையும் புகழ் அடைவாள். இருவரும் மகிழ்ச்சியுடன் இவ்வுலகில் பல்லாண்டு இருந்து அரசாக்ஷி செய்வர்''. சீதைக்கு ஆச்சர்யம், குழப்பம். வரப் போவதை சொல்வதால் பறவைகள் தெய்வீகமாக இருக்க வேண்டும் என்று எண்ணி இன்னும் என்ன சொல்லப்போகின்றன என்னும் ஆவலில் அவைகளைப் பிடித்து வந்து கூண்டில் வைத்துவிட்டாள். ''உங்களுக்கு ஆபத்து எதுவும் வராது. நீங்கள் இருவரும் யார் இப்படி எப்படிப்பேசுகிறீர்கள் ?ராமன் யார் சீதை யார் ''என்று வினவினாள்.

'' ஓ பெண்ணே நாங்கள் வால்மீகி ரிஷி ஆஸ்ரமத்திலிருக்கோம். அவர்தான் ராமாயணம் என்னும் காப்பியத்தை தன் சிஷ்யர்களுக்கு போதிக்கிறார். அதில்தான் தசரதரின் நான்கு புத்ரர்களில் முதல் மகன் ராமன் லக்ஷ்மணனு டன் விஸ்வாமித்ரரால் அழைத்துவரப்பட்டு

சிவதனுஸ்ஸை ஒடித்து சீதையை மணப்பார். சீரும் சிறப்புமாக ஆக்ஷி செய்வார். பெண்ணே நீ யார் ?

என்று கேட்டன. நீங்கள் சொல்லும் ஸீதை நான்தான். நல்ல வார்த்தை கூறின நீங்கள் இங்கேயே இருங்கள். வசதிகள் செய்து தருகிறேன். எப்போது ராமர் வருவாரோ அப்போது உங்களை விடுதலை செய்கிறேன்'' என்றாள். பெண்ணே நாங்கள் சுதந்திரமாகத் திரிபவர்கள். எங்களை இப்படி கூண்டில் அடைப்பது பாவம், மேலும் பெட்டை கர்பவதியாக உள்ளாள், எனவே விடுதலை செய் '' என்றன. ஸீதையின் போறாத காலம் அவர்கள் சொன்னதை கேட்கவில்லை. ஆண் பறவையை மட்டும் விடுவிக்கிறேன். பெட்டை என்னுடன் இருக்கட்டும் எனும் நிபந்தனையை விதித்தாள்.

ஆண் துணை இன்றி இருக்க நேரிடும் என்பதை நினைத்த பெண் பக்ஷி மிகவும் துயரப்பட்டது. தன்னை மாய்த்துக்கொள்ள துணிந்தது. அதற்கு முன் ஸீதையைப்பார்த்து ''கர்பவதியாகி நீயும் உன் கணவனைப் பிரிந்து வாடு'' என்று சபித்து உயிர் நீத்தது. அப்போது ராமரையே நினைத்துக் கொண்டிருந்ததால் ஸ்வர்கமேறியது.

தன் பெட்டை போனது கண்டு ஆண் பறவை மிகவும் கோபத்துடனும் துயரத்துடனும் கங்கையில் வீழ்ந்து மாய்ந்தது. அதற்குமுன் தான் அயோத்தியில் ஸீதையின் துரத்ரஷ்ட் ரத்துக்குக் காரணமாக வேண்டும் என்று சங்கல்பித்திருந்தது. க்ரோதத்துடன் இறந்ததால் க்ரோதனன் என்னும் பெயர் கொண்ட வண்ணானாகப் பிறந்து ராமரிடமிருந்து கர்பவதியான ஸீதையைப் பிரித்தது. சற்றும் இதை எதிர்பார்க்காத ஸீதை மிகவும் மனம் நொந்தாள். விதி யாரை விட்டது.

(பாத்ம புராணம்)

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

अयि निजहुङ्कृतिमात्र निराकृत धूम्रविलोचनधूम्रशते
समरविशोषित शोणितबीज समुद्भवशोणितबीजलते ।
शिव शिव शुम्भ निशुम्भ महाहव तर्पित भूतपिशाचरते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ७।।

**அயி நிஜஹுங்க்ருதி மாத்ர நிராக்ருத தூம்ரவிலோசன தூம்ரசதே**
**ஸமரவிசோஷித சோணிதபீஜ ஸமுத்பவ சோணித பீஜலதே**
**சிவ சிவ நிசும்ப மஹாஹவ தர்பித பூத பிசாசரதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யக பர்தினி சைலஸுதே ।7।**

*தூம்ர விலோசனன் முதலிய நூற்றுக்கணக்கான அசுரர்களை ஹுங்காரத்தினாலேயே தோற்று ஓடச் செய்தவளே போரில் மாண்ட அசுரர்களின் ரத்தக்கடலில் தோன்றிய அழகிய சிவந்தகொடி போன்றவளே சும்பனி சும்ப அசுரர்களை அழித்ததாகிய மாபெரும் வேள்வியால் பூத கணங்களை மகிழ்வுறச்செய்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

धनुरनुषङ्ग रणक्षणसङ्ग परिस्फुरदङ्ग नटत्कटके
कनक पिशङ्ग पृषत्कनिषङ्ग रसद्भट शृंग हतावटुके ।
कृतचतुरङ्ग बलक्षितिरङ्ग घटट्बहुरङ्ग रटट्बटुके ।
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ८।।

**தனுரனஷங்க ரணக்ஷனசங்க பரிஸ்புரதங்க நடத்கடகே**
**கனகபிசங்க ப்ருஷத்க நிஷங்க ரஸத்படஸ்ருங்க ஹதாவடுகே**
**க்ருதசதுரங்க பலக்ஷித்ரங்க கடத்பஹுரங்க ரடத்வடுகே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே ।8।**

*வில்லை வளைத்துப் போர் செய்வதால் நடனமாடுவதுபோல் அசைகின்ற கை வளைகளை அணிந்தவளே பொன் அம்புகளில் ஒரு கையும் அம்பறாத் தூணியில் மற்றொரு கையுமாக விரைந்து அம்புகளை பொழிந்து ஒலி எழுப்பும் வீரர்களை கொன்றவளே, நால்வகை சேனைகளும் நிறைந்த போர்க்களத்தில் வெட்டப்பட்ட தலைகளை சதுரங்கக் காய்களைப்போல் விளையாடுபவளே மஹிஷாஸுரனை அழித்தவளே, அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

परमामनि हि सर्वात्मनि विग्यायते सर्वमिदम् विगयातम् स्यात् 31

**பரமாத்மனி ஹி ஸர்வாத்மனி விஞ்யாயதே ஸர்வமிதம் விஞ்யாதம் ஸ்யாத்.**

*(ப்ரம்மாஸூத்ர பாஷ்யம் 1-3-1-1)*

*எல்லா ப்ராணிகளிலும் ஒரே பரமாத்மாதான் உள்ளது என்று உணரும்போது எல்லா மறிந்ததாகும்.*

यस्तु सर्वशरीरेषु उपाधिभिर् विनोपलयते पर एव स भवति 32

**யஸ்து ஸர்வஸரீரேஷு உபாதிபிர் வினோபலயதே பர ஏவ ஸ பவதி.**

*( ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-3-2-7)*

*எல்லா சரீரங்களிலும் அப்பரமாத்மாதான் கூடஸ்தனாக மறைந்துள்ளது.*

जीवमेव शरीरत् समुत्थितमौतमपुरुषम् दर्सयति 33

**ஜீவமேவ ஸரீராத் ஸமுத்திதபுருஷம் தர்சயதி**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் )*

*சரீரத்திலிருக்கும் உத்தமபுருஷனை ஜீவனே காட்டுகிறான்.*

न परस्माद्ब्रह्मणोम्रुत अबयस्वरूपादन्यम् जीवम् दर्शयति 34

**ந பரஸ்மாத் ப்ரம்மணோ அம்ருத அபய ஸ்வரூபாத் அன்யம் ஜீவம் தர்சயதி.**

*(ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம் 1-3-5-11)*

*நித்யம் அம்ருத அபய ஆனந்த ஸ்வரூப ப்ரம்மத்தைத் தவிர அன்யமான வஸ்து எதையும் ஜீவன் காட்டுவதில்லை.*

प्रतिपाध्यम् तु शास्त्रार्थमात्मैकत्वमेव दर्शयति 35

**ப்ரதிபாத்யம் து சாஸ்த்ரார்தம் ஆத்மைகத்மேவ தர்சயதி**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம்)*

*எல்லா ப்ராணிகளிலும் ஒரே ஆத்மா தான் உள்ளது என்பதை சாஸ்த்ரம் நிலை நிறுத்தி காட்டுகிறது.*

तदत्र विग्यानात्मन: परमात्मनैकत्वम् उपदिश्यते 36

**ததத் ர விஞ்யானாத்மன; பரமாத்மனைகத்வம் உபதிஸ்யதே**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 1-3-8-25)*

*இவ்விடத்தில் விஞ்யானத்மனும் பரமாத்மாவும் ஒன்று என்பது உபதேசிக்கப்படுகிறது.*

न स ब्रह्मणोन्यानामरूपाभ्याम अर्थान्तरम् सम्बवति 37

**ந ஸ ப்ரம்மணோ அன்யாத் நாமரூபாப்யாம் அர்தாந்தரம் ஸம்பவதி.**

*(ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம் 1-3-12-4)*

*நாமரூபங்கள் எதுவும் ப்ரம்மத்தைத் தவிர வேறு இல்லை என்பதை கூறும்.*

श्रुतिर्हि वैदिकात्मैकत्वविग्यानादन्यनि: श्रेयसाध्नम् सम्बवति 38

**ஸ்ருதிர் ஹி வைதிகாத்மைகத்வ விக்யானாத் அன்ய நிஸ்ரேயஸாதனம் வாரயதி.**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 21-2-3)*

*வேதங்களால் சொல்லாப்பட்ட ஜீவ பரமாத்ம ஆனந்தத்தை வேறு வாயிலாக அடைவதை தடுக்கிறது.*

स्व्यम् प्रसिद्दम् हि एतत् शरीरस्य ब्रह्मत्वम् उपदिश्यते 39

**ஸ்வயம் ப்ரஸித்தம் ஹி ஏதத் சரீரஸ்ய ப்ரம்மத்வம் உபதிஸ்யதே**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 2-1-6-14)*

*உபாதியில் உள்ள ஆத்மாவுக்கு ப்ரம்மத்வம் ஸ்வயம் சித்தமாகும்.*

ब्रह्मात्वभावस्य अनवथाविशेष निबन्दनत्वात् ।। 40

**ப்ரம்மாத்வபாவஸ்ய அனவஸ்தாவிஸேஷ நிபந்தனத்வாத்**

*(ப்ரம்மஸூத்ர பாஷ்யம் 2-1-6-14)*

*ஜீவபரமாத்ம ஐக்யம் எனும் தத்வம் விசேஷ நிபந்தனாத்தினால் உள்ளது.*

*(தொடரும்)*

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

*பருப்பொருள்களின் இயல்பு*

**ஸ்பர்ச ரூப ரச கந்தானக்னீந்த்ர உபேந்த்ர யம ப்ரஜாபதிபி:க்ரமாத் நியந்த்ரிதேன வாகாதி இந்த்ரிய பஞ்சகேன க்ரமாத் வசன ஆதான கமன விஸர்க ஆனந்தான் சந்த்ர சதுர்முக சங்கராஸ்யுதை: க்ரமாத் நியந்த்ரிதேன மனோபுத்தி அஹம்காரசித்தாக்யேன அந்தரிந்த்ரிய சதுஷ்கேன க்ரமாத் ஸங்கல்ப நிச்சய அஹம்கார்ய ச ஏதாம்ச ஸர்வானேதான் ஸ்தூல விஷயான் அனுபவத: ''ஜாகரிஸ்**_தானே பஹி:ப்ரஞ்ய : (மாண்டூக்ய உபனிஷத் 3)_
**இத்யாதி ஸ்ருதே:** _।। 115_

*இந்த வைஸ்வனும் வைஸ்வானரனும் தேவதைகளால் ஆளப்பட்ட பஞ்சேந்த்ரியங்களால் ரூப ரஸ கந்தம் முதலியவகளால் ஆன இவ்வுலகை பார்க்கின்றனர். அதே சமயத்தில் அவர்கள் அக்னி விஷ்ணு யமன் முதலிய தேவதைகளால் ஆளப்பட்டு இவ்வுலகில் பேசுவது, நடப்பது போன்ற செயல்களையும் செய்வர். சந்த்ரன் ப்ரம்மா சிவன் விஷ்ணு இவர்களால் ஆளப்பட்ட மனம் புத்தி அஹங்காரம் இவைகளால் ஸங்கல்பம் நிச்சயம் முதலிய மனம் சார்ந்த செயல்களை அனுபவிப்பர்.'' விழிப்பு நிலையில் வெளி ப்ரஞ்யன்'' என்னும் ஸ்ருதியைக் காண்க.*

**அத்ராப்யனயோ:ஸ்தூல வ்யஷ்டி ஸமஷ்ட்யோஸ்ததுபஹித விஸ்வ வைஸ் வானரயோச்ச வனவ்ருக்ஷவத் அவச்சின்ன ஆகாசவச்ச ஜலாஸய ஜலவத் தத்கத ப்ரதிபிம்பாகாஸவச்ச பூர்வவத் அபேத: ।। 116**

*இங்கும் வைஸ்வனும், வைஸ்வானரனும் முன் கூறியபடியே தனிமரத்துக்கும் தோப்புக்கும்,ஜலபிந்துவுக்கும் ஏரி போன்று உள்ள ஜலாசயத்துக்கும் ஒப்பாவார்கள்.*

**ஏவம் பஞ்ஜீக்ருதபஞ்ச பூதேப்ய: ஸ்தூலப்ரபஞ்ஜோத்பத்தி: ।। 117**

*இதுவே ஸ்தூல பஞ்சமகாபூதங்களிடமிருந்து ப்ரபஞ்சத்தின் உத்பத்தி.*

## *அத்யாரோபத்தின் வரம்பு*

**ஏதேஷாம் ஸ்தூலஸூக்ஷ்மகாரணப்ரபஞ்சானாமபி ஸமஷ்டிரேகோ மஹான்ப்ரபஞ்சோ பவதி யதாவாந்தரவனானாம் ஸமஷ்டிரேகோ மஹத்வனம் பவதி யதா வாவாந்தரஜலாஸயானாம் ஸமஷ்டிரேகோ மஹான் ஜலாஸய: ।। 118**

*இந்த ஸ்தூல ஸூக்ஷ்ம காரண ப்ரபஞ்சத்தின் சமஷ்டி சின்ன சின்ன வனங்கள் சேர்ந்து பெரும் வனமாவது போலவும், சின்ன சின்ன ஏரிகள் சேர்ந்து பெரும் நீர்பரப்பு போலவும் கூறப்படும்.*

**ஏதது பஹிதம் வைஸ்வானராத் ஈஸ்வரபர்யந்தம் சைதன்யமபி அவாந்தர வனவத் சின்னாகாசவத் அவாந்தர ஜலாஸயகத ப்ரதி பிம்பாகாசவத் ச ஏகமேவ ।। 119**

*சின்ன வனம் எடுத்துக் கொள்ளும் ஆகாசமும் பெரும் வனம் எடுத்துக் கொள்ளும் ஆகாசமும்,சின்ன ஏரியில் விழும் பிம்பமும் பெரும் நீர்பரப்பில் தோன்றும் பிம்பமும் எப்படி ஒன்றோ வைஸ்வானரம் முதல் ஈஸ்வரன் வரை ஒரே சைதன்யம்தான் உள்ளது.*

**ஆப்யாம் மஹாப்ரபஞ்ச ததுபஹித சைதன்யாப்யாம் தப்தாயா: பிண்டவத் விவிக்தம் ஸதனுபஹிதம் சைதன்யம் ''ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம'' இதி (மஹா) வாக்யஸ்ய வாச்யம் பவதி விவிக்தம் ஸல்லக்ஷ்ய மபி பவதி ।। 120**

*உபாதிகளோடு சேராதிருக்கும் சைதன்யம் (நெருப்பில் தகிக்கும் இரும்பு குண்டு போல) இது எல்லாம் ப்ரம்மமே என்று கூறும்போது வாச்யார்த்தமாகவும் லக்ஷ்யார்த்தமாகவும் பெறப்படும்.*

**ஏவம் வஸ்துன்யவஸ்த்வாரோபோ அத்யாரோபோ ஸாமான்யேன ப்ரதர்சித: ।। 121**

*இப்படி வஸ்துவில் அவஸ்து ஆரோபம் என்னும் அத்யாரோபம் பொதுவாக சொல்லப்பட்டது.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



க்ருஷ்ணனுடன் இருந்த அர்ஜுனனிடம் மயன் சொன்னான்.'' என்னை காப்பாற்றினீர். நான் என்ன செய்ய வேண்டும்'' என்று பெரும் மாளிகை ஒன்றை கட்டி முடிக்க உத்தரவிட்டு தர்மரிடம் விடை பெற்றுக் காண்டு கண்னன் த்வாரகைக்குப் போனான்.

மயன் மூவுலகிலும் ப்ரஸித்திபெற்ற நானாவிதமான ஜொலிக்கும் மணிகளாலும் உயர்ந்த கற்களாலும் ஒளிரும் ஒரு மாளிகையைக் கட்டினான்.

அந்த சிறந்த மாளிகையில் பாண்டவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது த்ரிலோக சன்சாரியான நாரத மகரிஷி தர்மரைப் பார்த்து கேட்டார். யுதிஷ்ட்ரனே லௌகிகமானவைகள் உனக்கு கிடைத்தனவா உன் புத்தி தர்மத்தில் உள்ளதா? உனக்கு விஸ்வாசமானவர்களை மந்த்ரிகளாக நியமித்துள்ளயா?

உனது கோட்டைகள் தனம், தான்ய, நீர், கருவிகள் நிறந்தனவாக உள்ளனவா / உன்னுடைய புரோஹிதர்கள் வினய ஸம்பன்னகளா / உன்னுடைய சேனைகளுக்கு தக்கச் சமயத்தில் பணம் கொடுக்கிறாயா / பாத்ரம் அறிந்து வித்வான்களுக்கு சன்மானம் அளிக்கப்படுகிறதா? பரதகுல திலகமே உனக்காக உயிர் நீத்த வீரர்களின் மனைவிகள் நன்றாக பரிபாலிக்கப்படுகின்றனரா?

நாட்டின் வருமானம் அறை முக்கால், கால் என்று வரையரையுடன் செலவாகிறதா / பொருளில்லாமல் தவிக்கும் முதியோர், வித்வான்கள், வணிகர்கள், கலைஞர்கள் இவர்களுக்கு அடிக்கடி உதவி செய்கிறாயா? உன் நலனில் அக்கரை கொண்டும் விஸ்வாசமாக உனக்கு உழைக்கும் அதிகாரிகளை நீக்காமல் இருக்கிறாயா? மழையை மட்டும் நம்பி இராமல் உன் நாட்டில் உள்ள சிறிய பெரிய ஏரிகள் நிரம்பியுள்ளனவா ?

உன் நாட்டின் பொருளாதாரம் தக்க அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகிறதா? மக்கள் மகிழ்ச்சிக்கு நல்ல பொருளாதாரமே காரணம். ஒரு நல்ல கார்யத்தை செய்த மனிதனை பாராட்டுகிறாயா?

உன் ராஜ்யம் ரோகமில்லாமல் உள்ளதா? உன் நாட்டை அக்னி, பூச்சிகள் கொடிய விலங்குகள் இவைகளிடமிருந்து காப்பாற்றுகிறாயா? ஆதரவற்றவர்களையும் அனாதைகளையும், ஊனமுற்றவர்களையும் தந்தைபோல் காப்பாற்றுகிறாயா / நெடும் துயில், சோம்பல், அச்சம், கோபம், அதிம்ருதுவாயிருத்தல், தள்ளிப்போடுதல் இந்த ஆறு வ்யசனங்களும் உனக்கு இல்லையே ?

பரதகுல திலகமே நீ இவ்வுலகம் முழுவதும் ஆள்வாய். இவ்வாறு உன் தந்தை பாண்டு கூறியிருக்கிறார். உன்னுடைய தம்பிகளோ திறமைசாலிகள். அதனால் நீ இப்போது ராஜஸூய யாகம் செய் என்று நாரதமகரிஷி கூறினார். இதைக் கேட்ட தர்மர் க்ருஷ்ணனை நினைத்து அவருக்குத் தூது அனுப்பினார்.

வடக்குத் திசையை அர்ஜுனனும், பீமன் கிழக்கையும்,ஸஹதேவன் தென் திசையையும், நகுலன் மேல் திசையையும் வென்றார்கள். மிகவும் மகிழ்ந்த க்ருஷ்ணர் அன்பளிப்புகள் பலவற்றை எடுத்துக் கொண்டு பாண்டவர்களைப் பார்க்க இந்த்ரப்ரஸ்தமேகினார்.

(தொடரும்)

# அஹங்காரம்

கௌண்டின்யன்

ப்ரஹ்மபுத்திரரான தர்மனுக்குத் தக்ஷப் பிரஜாபதியின் பெண்ணினிடம் பிறந்த நரன், நாராயணன் என்ற இரண்டு ரிஷிகள் பதரிகாச்ரமத்தில் கடும் தவம் புரிந்து வந்தார்கள். இதைக் கண்டு தன் பதவிக்கு அழிவு ஏற்படும் என்று பயந்த தேவேந்திரன் அவர்களுக்கு வேண்டிய வரம் தருவதாகச் சொல்லி ஆசை மூட்டப் பார்த்தான். அவர்கள் வாயைத் திறவாததால் மோஹனாஸ்திரத்தால் பயங்கரமான தோற்றங்களை உண்டுபண்ணி அவர்களுடைய மனதைக் கலக்க முயன்றான். அதுவும் பலிக்காமல் போகவே மனச்சோர்வடைந்து தேவலோகம் திரும்பி மன்மதனையும் ரதியையும் பல அப்ஸரஸுக்களுடனும் வஸந்த ருது, மெல்லிளங் காற்று முதலிய சாதனங்களுடனும் பதரிகாச்ரமத்திற்கு அனுப்பிக் காம வெறியை ரிஷிகள் மனத்தில் கிளப்ப எத்தனித்தான். இவர்களின் விலாசங்களால் ரிஷிகளின் நிஷ்டை கலைக்கப்பட, அவர்கள் இது இந்த்ரன் செயல் என்று கண்டு, வந்தவர்களைச் சாவதானமாக உபசரித்து வரவேற்றார்கள்.

நாராயணரிஷி சற்று அகங்காரமடைந்து தம் மனத்துக்குள் பின்வருமாறு எண்ணலானார்: 'இந்திரன் அனுப்பிய இந்தப் பதர்களா என் தவத்தைக் கலைக்கும் சக்தி வாய்ந்தவர்கள்? இவர்களைவிடப் பன்மடங்கு அழகுள்ள ஸ்திரீகளை என் தபோபலத்தால் உண்டுபண்ணி இவர்கள் கொட்டத்தை அடக்குவேன்.' இப்படி எண்ணித் தம் தொடையை கையால் தட்டவே அழகுத் தெய்வமே உருவெடுத்தாற் போன்ற ஊர்வசீ தோன்றினாள். அவளையும் அவளுகுப் பணிவிடை செய்வதற்காகத் தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பல மாதர்களையும் தேவலோகத்திலிருந்து வந்த அப்ஸரஸுக்களுக்குக் காட்டி, 'இவர்களை உங்களுடன் அழைத்துச் சென்று, தேவராஜனுக்கு இவர்களை நாம் காணிக்கையாக வழங்கினோம் என்று தெரிவிப்பதுடன் இனி யாருடைய தவத்தையும் கெடுக்க அவர் முயற்சி செய்யக் கூடாது என்று நாம் சொன்னதாகச் சொல்லுங்கள். உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள் தருகிறோம்' என்றார் ரிஷி.

இதைக் கேட்ட அப்ஸரஸுக்கள், 'ஊர்வசீ முதலியோர் தேவலோகம் செல்லட்டும். திருமாலின் அவதாரமான தாங்கள் எங்களைத் தமது

பணிப்பெண்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே எமக்கு உகந்த வரம். எங்கள் ஆசையைப் புறக்கணித்தல் பாவமாகும்' என்று ஸாஹஸம் செய்தார்கள்.

இதைக் கேட்ட ரிஷி தம் மனத்துக்குள் சிந்திக்கலானார், 'இவர்களுடைய நிர்பந்தம் என் அஹங்காரத்தின் விளைவல்லவா? வாயைத் திறவாமல் இருந்திருந்தால் இவர்களுடைய விலாஸங்கள் பயனற்றவயாயிருக்கும். அப்படிச் செய்யாமல் தவத்தையும் செலவாக்கி ஊர்வசீ முதலியோரை ஸ்ருஷ்டி செய்தேன். சிலந்தி தான் கட்டின கூட்டினால் தானே கட்டுண்டு கிடப்பது போலல்லவா ஆயிற்று! காமவசப்பட்டு இவர்கள் என்னை நிர்பந்திக்கிறார்கள். கோபத்தை வரவழைத்துக் கொண்டு இவர்களைச் சபிக்கட்டுமா? ஆனால் கோபம் காமத்தை விடப் பலமான சத்ருவாயிற்றே, மரம் உராய்வதால் உண்டாகும் நெருப்பு எப்படி மரத்தையே கொளுத்துமோ அப்படிக் கோபமும் கோபிப்பவன் சரீரத்தையே அழிக்குமே!'

இவ்விதம் இவர் கவலைப்படுவதைக் கவனித்த நரன் என்ற ரிஷி, 'தாங்கள் கோபத்தை அடக்க வேண்டும். அது ஒன்றேதான் அஹங்காரத்தைத் தொலைக்க வழி. ஏற்கனவே கோபத்திற்கு இடம் கொடுத்ததனால் தானே ப்ரஹ்லாதனுடன் வெகுகாலம் யுத்தம் செய்து தபஸ்ஸை இழக்கும்படி நமக்கு நேரிட்டது? என்று நினைவூட்டினார்.

அது எப்படியென்றால், பாதாளத்தில் அசுரர்களைத் தர்மமாக ஆண்டு வந்த ப்ரஹ்லாதன் தீர்த்த யாத்திரை செய்ய ஸரஸ்வதி நதிக்கரையை அடைந்தான். அங்கே ஓர் ஆச்சரியத்தைக் கண்டான். பரம தேஜஸ்விகளான இரு ரிஷிகள் சமாதியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்குச் சமீபத்தில் இரண்டு வில்களும் உயர்ந்த அம்புகளும் காணப்பட்டன. 'தவம் எங்கே, வில் எங்கே? இது விபரீதமாக அல்லவா இருக்கிறது?' என்று நினைத்த ப்ரஹ்லாதன், தபஸ்விகளை, 'நீங்கள் தகாத இந்தக் காரியம் ஏன் செய்கிறீர்கள்?' என்று கேட்டான். இதற்கு நரன் என்ற ரிஷி மிடுக்காகப் பதிலளித்தார். அதைப்பற்றி உனக்கு ஏன் கவலை? சக்திமான்கள் எதையும் செய்யலாம். உலகம் எங்கள் தவத்தையும் பராக்கிரமத்தையும் அறியும். நாங்கள் தபஸ், வில் வித்தை இரண்டையும் ஒருங்கே சமாளிப்போம். எங்கள் நடத்தையைச் சோதிப்பதற்கு

நீ யார்? உன் வேலையைப் பார்' என்றார். ப்ரஹ்லாதனுக்கு கோபம் பதின்மடங்காயிற்று. 'தம் ஆச்ரமதர்மத்துக்கு விரோதமாக நடந்துகொள்ளும் ப்ராஹ்மணர்களை அடக்கித் திருத்துவது ராஜாவான என்னுடைய வேலை' என்று கூறி அதட்டினான். அவனுக்கும் ரிஷிகளுக்கும் கடும் போர் மூண்டது. வெகு காலமாகியும் எந்தக் கையும் தோற்காதது கண்டு மகாவிஷ்ணுவே நேரில் வந்து சண்டையை விலக்கிப் ப்ரஹ்லாதனுக்கு அருள்புரிந்தார். நர நாராயண ரிஷிகளும் தாம் செய்ததை நினைத்து வெட்கி, திருமாலைச் சரணமடைந்து திரும்பத் தவத்தில் ஈடுபட்டார்கள். இந்த வெகு நாளையச் சம்பவத்தை நான் ஞாபகமூட்டவே நாராயணனும் கோபத்தை விலக்கி மௌனத்தை ஏற்றுக் கொண்டார். அஹங்காரம் அடங்கினவனிடம் தங்கள் தந்திரம் பலிக்காது என்று கண்ட அப்ஸரஸுக்கள் தேவலோகம் சென்றார்கள்.

-தேவீ பாகவதம்.

# எல்லா செய்திகளும் இரண்டே வார்த்தைகளில்

ஸத்ய நாராயணன்

இன்றைய சமுதாயத்தில் தினசரி செய்தித்தாள்கள், வார மற்றும் மாத இதழ்கள் தினந்தோறும் அதிகரித்து வருவதை நம்மால் காண முடிகிறது. முன்பெல்லாம் கடைகளில் இரண்டு அல்லது மூன்று செய்தித்தாள்களும் ஐந்து முதல் பத்து வார இதழ்களும் மட்டுமே இருக்கும். ஆனால் தற்போது சுமார் பதினைந்து செய்தித்தாள்களும் நூற்றுக்கும் மேற்பட்ட வார மாத இதழ்களையும் நம்மால் காண முடிகிறது. இவையெல்லாம் என்னதான் சொல்கின்றன என்பதையும், பகவான் கிருஷ்ணர் இதற்கு வழங்கும் சான்றிதழைப் பற்றியும் காண்போம்.

**மக்களைக் கவரும் செய்தித்தாள்கள் :** இன்று செய்தித்தாள்களும் இதர இதழ்களும் அதிகரிப்பதற்கு நவீன விஞ்ஞான வசதிகளும் தொழில்நுட்பங்களும் முக்கிய காரணமாக அமைகின்றன, எல்லா மொழிகளிலும் தினசரி செய்தித்தாள்கள் கண்டிப்பாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. உலகின் மூலை முடுக்குகளிலுள்ள நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள இன்டர்நெட், வாட்ஸ்-அப், மின்னஞ்சல் என நவீன விஞ்ஞான வசதிகள் மக்களுக்கு பெரிய உதவியாக இருக்கின்றன. காலையில் எழுந்தவுடன் மிகவும் இன்றியமையாத தேவை: ஒரு கையில் காபி, மறு கையில் செய்தித்தாள். பாமரன் முதல் பணக்காரன் வரை செய்தித்தாளைப் படிக்காமல் இருப்பவர் எவரும் இலர். எனவே, இன்றைய சமுதாயத்தில் செய்தித்தாள் மனித வாழ்க்கையுடன் மிகவும் ஒன்றிவிட்டது என்றால் அது மிகையாகாது.

**செய்தித்தாள்களில் வரும் செய்திகள் :** மக்கள் செய்தித்தாள்களை அவ்வளவு ஆர்வமாக தினசரி படிக்கிறார்கள் என்ற போதிலும், அதிலுள்ள செய்திகளை நாம் சற்று ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். முதலில் செய்தித்தாள்களில் வரும் செய்திகளைப் பட்டியலிடுவோம்: வன்முறை, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போர், அரசியல், ஊழல், விபத்துகள், கலவரம், விளையாட்டு, சினிமா முதலியவை. நீங்கள் படிக்கும் செய்தித்தாள்களில் மேலே சொன்ன விஷயங்களை தினசரி

பார்த்திருப்பீர்கள். பெயர், ஊர், எண்ணிக்கை முதலிய விபரங்களில் மட்டுமே மாற்றம், செயல்களில் மாற்றமே இல்லை, அதே செயல்கள்தான் மீண்டும்மீண்டும் வழங்கப்படுகிறது. செய்தித்தாள்களை நாம் ''இன்றைய நியூஸ் பேப்பர், நாளைய வேஸ்ட் பேப்பர்,'' என்று கூறினால், முற்றிலும் தகும்.

ஜடவுலக மகிழ்ச்சி என்பது பாலைவனத்தில் கிடைக்கும் ஒரு சொட்டு நீரைப் போன்றது.

*பகவானால் படைக்கப்பட்ட சக்தியை முறையாக பயன்படுத்துதல்*

செய்தித்தாள் அச்சடிக்க தேவைப்படும் காகிதங்களை தயாரிப்பதற்காக பெருமளவில் மரங்கள் அழிக்கப்பட்டு, இயற்கை சீரழிகிறது. ஆனால் அதே காகிதங்கள் மக்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக உபயோகப்படுத்தப்பட்டால், அது மிகவும் பயனுள்ளதாக அமையும். பகவானுடைய செய்திகளை பிரச்சாரம் செய்வதற்காக ஆன்மீக இயக்கங்கள் மனித வாழ்க்கைக்கு பயனுள்ள நூல்கள் பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் மற்றும் பல்வேறு நூல்களை அச்சடித்து விநியோகம் செய்து வருவதன் மூலம் மனித வர்கம் பயடைந்து வர வாய்ப்பு ஏற்படும். அதன் மூலம் மக்களின் மனமானது தூய்மை அடையும். ஆனால் மேலே கூறிய செய்தித்தாள்களில் வரும் குப்பைகளை (செய்திகளை) படிக்கும்போது மனம் களங்கமடைகின்றது.

*எல்லா செய்திகளும் இரண்டே வார்த்தைகளில்*

பகவத் கீதையில் (8.15) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இந்த மொத்த ஜடவுலகத்தின் தன்மையினை ''துன்பம் நிறைந்தது, தற்காலிகமானது'' என்று இரண்டே வார்த்தைகளில் கூறுகிறார்-து:காலயம் அஷாஷ்வதம். இந்த இரண்டு வரிகளில் அனைத்து செய்திகளும் அடங்கி விடுகின்றன. ஏனெனில், எந்த செய்தியை நாம் படித்தாலும் அவை இரண்டு வகையில் அடங்குகின்றன: (1) துன்பகரமான சூழ்நிலை, (2) தற்காலிக இன்பம். பகவான் கிருஷ்ணர் இந்த ஜடவுலகத்திற்கு கொடுக்கும் சான்றிதழ் இதுவே. பகவானின் வாக்கு என்றும் பொய்க்கப்போவதே இல்லை. ஆனால் இதை அறியாத ஜீவன் தனக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்று போராடுவது எந்த விதத்தில் நியாயம்?

மக்கள் ஒரு விஷயத்தை நன்றாக கவனிக்க வேண்டும், இந்த உலகம் துன்பகரமானது என்றும் தற்காலிகமானது என்றும் சாக்ஷாத் பகவானே கூறிய பிறகு, நிதான புத்தியுடைய எவரும் இத்தகு மகிழ்ச்சியை அடைவதற்கு முயல மாட்டார்கள். மக்களிடம் இருக்கும் மிகப்பெரிய பிரச்சனை என்னவெனில், அவர்கள் நிதான புத்தியுடன் எதையும் செய்வதில்லை; எங்கும் எப்போதும் பரபரப்பு, வேகம், ஓட்டம். என்றாவது ஒருநாள் நிதானமாக வாழ்வின் நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தால், எவ்வளவு துன்பப்படுகிறோம் என்பதை அவர்களால் உணர முடியும்.

காஞ்சிபெரியவர் கலியுகத்தில் பகவானுடைய நாமாக்களான ராமா, கிருஷ்ணா, சிவா என்னும் நாமாக்களை கூறுமாறு அறிவுறுத்துகிறார்.

**மாயையின் செயல் :** கட்டுண்ட ஜீவன் தன்னுடைய இன்பத்திற்காக பல்வேறு செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றான். ஆனால் இத்தகைய செயல்கள் அவனுக்கு பெரிய அளவிற்கு இன்பத்தைக் கொடுப்பதில்லை. அதுமட்டுமின்றி, தான் இந்த அளவிற்கு துன்பப்படுகின்றோம் என்பதைக்கூட அறியாத அளவில், மாயை கட்டுண்ட ஜீவனை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. இதை அடைந்தால் நான் இன்பமடைவேன், நல்ல மதிப்பெண் கிடைத்தால் இன்பம் கிடைக்கும், நல்ல வேலை கிடைத்தால் இன்பம் கிடைக்கும், நல்ல மனைவி கிடைத்தால் இன்பம் கிடைக்கும், நல்ல குழந்தைகள் பெற்றால் இன்பம் கிடைக்கும், நல்ல செல்வம் பெற்றால் இன்பம் கிடைக்கும் என்ற ஏக்கத்திலேயே கட்டுண்ட ஜீவனின் வாழ்க்கை ஓடுகிறது. இதற்காக பலவித போராட்டங்களை அவன் ஏற்கிறான், இன்பம் மட்டும் கிடைப்பதாக தெரியவில்லை. மிகப்பெரிய பாலைவனத்தில் கடும் தாகத்தில் தவிப்பனுக்கு ஒரு சொட்டு நீர் கிடைத்தால், அஃது எப்படி தாகத்தைத் தீர்க்காதோ, அதே போல் கட்டுண்ட ஜீவனால் ஜடவுலகச் செயல்களில் மகிழ்ச்சியடைய முடியாது. அவ்வாறு இருப்பினும், மாயையின் சக்தி மிகவும் வலிமையாக இருக்கின்ற காரணத்தினால், கட்டுண்ட ஜீவனுக்கு சோர்வு ஏற்படாதவாறு அவனை மயக்குகின்றது.

**கட்டுண்ட ஜீவனின் கவர்ச்சி :** கட்டுண்ட ஜீவன் இரண்டு முக்கியமான விஷயங்களில் இன்பம் கிடைப்பதாக நினைத்துக் கொண்டுள்ளான்: ஒன்று செல்வம், மற்றொன்று இனக்கவர்ச்சி. மொத்த மனித சமுதாயமே ஆண்-பெண்

இனக்கவர்ச்சியின் மூலம்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது. எதிர்பாலருக்கு இடையிலுள்ள இந்த கவர்ச்சி நாம் மீண்டும்மீண்டும் இந்த பௌதிக உலகில் பிறவியெடுப்பதற்கு காரணமாகிறது. ஆண்கள் பெண்களின் சரீரத்தின் மீதும், பெண்கள் ஆண்களின் சரீரத்தின் மீதும் கவர்ச்சியடைகின்றனர். ஒருவர் தனது உடலைக் கைவிடும் தறுவாயில், எதன்மீது அதிக பற்று வைக்கிறாரோ, அந்த உடலை அடுத்த பிறவியில் அவர் அடைகிறார். நவீன காலத்திலுள்ள மக்கள் யார் மீது அன்பு செலுத்துவது என்பதை அறியாமல், செல்லப் பிராணி என்ற பெயரில் நாய், பூனை முதலிய பிராணிகளிடம் அன்பை வளர்க்கின்றனர். மேலை நாடுகளில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிறைய நடப்பது உண்டு, அவர்களைப் பின்பற்றி நம்முடைய நாட்டிலும் இத்தகைய கலாச்சாரம் பரவி வருகின்றது. இதுபோன்ற அன்பை வளர்த்துக்கொள்ளும் பட்சத்தில், அடுத்த பிறவியில் நாயின் உடல் கிடைப்பது உறுதி. துன்பம் என்பது மேன்மேலும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

தேவையற்ற நூல்கள் படிப்பதைத் தவிர்த்து நமது கவனத்தை தெய்வத்தின் குரல், இராமாயணம், மகாபாரதம், ஆன்மீக சம்பந்தமான நூல்களில் கவனம் செலுத்தலாமே!

**ஒவ்வொரு அடியிலும் ஆபத்து :** இந்த உலகத்தில் ஒவ்வொரு அடியிலும் அபாயம் இருக்கிறது என்று பகவத் கீதை மட்டுமல்லாது ஸ்ரீமத் பாகவதமும் கூறுகிறது, பதம் பதம் யத் விபதாம் ந தேஷாம். இந்த விஷயத்தை நாம் எளிதில் உணரலாம், நமது வாழ்வில் நாம் எந்தவொரு இன்பத்தையும் அனுபவிப்பதாக தெரியவில்லை. நமது ஒவ்வொரு அடியும் துன்பம் நிறைந்ததாகவே உள்ளது. இந்த துன்பங்களை நிறுத்த முடியாதா? நமக்கு மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லையா? நாம் நிரந்தரமாக துன்புற வேண்டியதுதானா? முதலிய கேள்விகளை நாம் எழுப்ப வேண்டும். அவ்வாறு எழுப்பாவிடில், நாம் மனித உடலைப் பெற்றதே வீண். இத்தகைய கேள்விகள் எழும் பட்சத்தில், அதற்கான விடை சாஸ்திரத்தின் மூலமாகவோ அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் மூலமாகவோ அந்த ஜீவனுக்குக் கிடைப்பது உறுதி.

**ஆன்மீக வாழவே இறுதி தீர்வு :** பகவான் கிருஷ்ணர் இந்த உலகத்தை து:காலயம், அஷாஷ்வதம் என்று கூறுகிறார்; இருப்பினும், நாம் எப்போதும் இந்த துன்பத்திலேயே உழன்று கொண்டிருக்க வேண்டும் என்று அவர் நினைப்பதில்லை.

நம் அனைவருக்கும் பகவனே நிரந்தர தந்தை, தந்தை ஒருபோதும் தன்னுடைய மகன் தனியாக துன்பப்படுவதை விரும்ப மாட்டார், மகன் தன்னிடம் வருவதற்கே மிகவும் விரும்புகிறார். அதுபோல, பகவானும் நாம் அவரிடம் வர வேண்டும் என்றே விரும்புகிறார்.

பல்வேறு காலங்களுக்கேற்ற மருந்துகள் இருப்பதைப் போல, பல்வேறு யுகங்களுக்கு தகுந்தாற் போல, பல்வேறு வழிபாட்டு முறைகள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. ஸத்ய யுகத்தில் தியானத்தின் மூலமாகவும், திரேதா யுகத்தில் யாகத்தின் மூலமாகவும், துவாபர யுகத்தில் விக்ரஹ வழிபாட்டின் மூலமாகவும், தற்போதைய கலி யுகத்தில் ஹரி நாமத்தின் மூலமாகவும் பகவானை வணங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாம் வாழக்கூடிய கலி யுகம் மிகவும் மோசமான குணங்களைக் கொண்டது. காமம், கோபம், மயக்கம், பொறாமை, சண்டை சச்சரவுகள் போன்றவை நிறைந்த இந்த கலி யுகத்தில் மிக அரிதான ஒரு வாய்ப்பும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அஃது என்னவெனில், பகவானின் திருநாம உச்சாடனமான ராமா, கிருஷ்ணா, நமச்சிவாய என்கிற மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம், நம்மால் முற்றிலும் துன்பமயமான இந்த ஜடவுலகிலிருந்து விடுபட இயலும்.

ஆன்மீக விஷயங்கள் என்றென்றும் புதிதானவை, என்றென்றும் ஆழமானவை. இதில் நாம் பெறும் அறிவிற்கு எல்லையே இல்லை. வாழ்நாள் முழுவதும் கீதையைப் படித்தால்கூட அதன் ஆழத்தை நம்மால் அறியவியலாது. ஆனால் காலை செய்தித்தாள்களை மாலையிலேயே அனைவரும் எறிந்து விடுகிறோம்.

எல்லா செய்தித்தாள்களிலும் நாம் பெறும் அறிவைக்காட்டிலும், பல மடங்கு உயர்ந்த அறிவினை நாம் கீதை, தெய்வத்தின் குரல், இராமாயணம், மகாபாரதம் முதலிய நூல்களில் பெறுகிறோம்.

ஆகவே செய்தித்தாள்கள் மற்றும் இதர கேளிக்கை வார இதழ்களை கைவிட்டு ஆன்மீக நூல்ளை படிப்போம்.

நன்றி - பகவத் தரிசனம்

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

இவ்விஷயத்தில் இதே உதாரணம் முற்காலத்திலேயே மறைமுடியாம் பிருஹதாரண்ய உபநிஷத்தின் பாஷ்யத்தில் முதல் அத்தியாயத்தில் 20-ம் கண்டிகையில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகளால் விளக்கப் பெற்றிருக்கிறது. இதனால் "சிவனானவன் முத்தி நிலையில் மாத்திரமேயன்றி, முக்காலத்தும் எப்பொருளும் சிவமே" என்ற நியாயத்தால், ஸம்ஸார நிலையிலும் தானறியாமற் போனாலும் பரம்பொருளைத் தவிர வேறல்லன் என்ற அத்வைத வேதாந்த உண்மை தெளிவாகிறது.

**வினா :** - அந்நூல் இக்கொள்கையையே கூறுகின்றது என்பதற்கு வேறு ஆதாரம் உண்டா?

**விடை :** - "யாவையும் சூனியம் சத்தெதிராதலின்" என்னும் சிவஞானபோதம் ஏழாவது சூத்திரத்தில் ஸத்தாகும் சிவத்தின் ஞானம் உதயமான பொழுது அச்சிவத்தைத் தவிர வேறுள்ள எல்லாப் பொருள்களும் சூனியமாய் விடுகின்றன." என்ற தத்துவம் விளக்கப்படுவதால் "பரமாத்மாவின் ஸாக்ஷாத் காரம் ஏற்படுங்கால், உலகம் இல்பொருளாகின்றது" என்னும் அத்வைத வேதாந்த தத்துவம் வலியுறுத்தப்படுகிறது.

**வினா :** - இன்னும் வேறு ஆதாரம் உண்டா?

**விடை :** - சிறந்த அனுபவாத்வைதியாகி தாயுமான ஸ்வாமிகள், சிவஞானபோதம் இயற்றிய மெய்கண்டாரை,

பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ?

என்று எந்நாட் கண்ணியிலே புகழ்கிறார்.

**வினா :** - தாயுமானவர் சிறந்த அத்வைதி என்பதற்கு ஆதாரம் என்ன?

**விடை :** - அவருடைய பாடல்கள் யாவும் - சுத்த அத்வைத தத்துவத்தையே விளக்குகின்றன. உதாரணமாகச் சிலவற்றைக் கூறலாம். சுத்த நிர்குணமான பாதெய்வமே என்று "சுகவாரி" யில் இறைவனை நிர்க்குணனாகக் கூறுகிறார். "இந்திர ஜாலங் கனவு கனலின் நீரென வுலகம்" எனப் பொருள் வணக்கத்தில் உலகத்தைப் பொய்யென்று அறிவிக்கிறார். "அத்துவித வஸ்துவை" "அத்துவித ஆனந்த சித்த முண்டாம் " "அத்துவித அனுபவத்தை" என்ற பலவிடங்களில், அத்வைதச்

சொற்களைப் பிரயோகிக்கிறார். இவற்றால், தாயுமானவர் சிறந்த அநுபவ அத்வைதி என்பது தெளிவு அன்றியும், முற்கூறிய பாட்டிலே, "அத்துவித மெய்கண்ட" என்ற தொடரால், "அத்துவிதமே மெய்" அதற்கு மாறான துவிதம் பொய் என்னும் கருத்தையும் வெளியிடுகிறார்.

**வினா :** - சைவமும், அத்வைதமும் ஒன்றே என்பதற்கு இன்னம் ஏதேனும் ஆதாரம் உண்டா?

**விடை :** - மெய்கண்டாருடைய சீடராகிய சிவஞான வள்ளல்,"வள்ளலார் சாத்திரம்" எழுதியிருக்கிறார். அவர் சிறந்த சைவராகக் கொள்ளப்படுவது போலவே, சிறந்த அத்வைதியாகவும் கொள்ளப்படுகிறார்.

**வினா :** - எவ்வாறு இது தெரிகிறது?

**விடை :** -

சைவ சித் தாந்தமெல்லாம் தானவனாகி நிற்றல்
மையறு வேத சித்த மற்றது நானே யென்னல்
உய்வகைக் கிரண்டு மொன்றேன் றோதியென்னுயிர்க்கிலாபஞ்
செய்தசற் குரவ னீயே திருப்புலி வனத்துளானே

என்று குருவைத் துதிக்கிறார். இதில் முத்திக்காம் இவ்விரண்டு சித்தாத்தங்களும் ஒன்றே என்று கூறுவதால், சைவசித்தாந்தமும் அத்வைதமேயாகிறது.

**வினா :** - மற்றும் சைவ சித்தாந்தத்தில் அத்வைதக் கொள்கை எங்குக் காணப்படுகிறது.

**விடை :** - "சித்தியார்" என்னும் அருணந்தி சிவத்தின் நூலுக்கு மேற்பட்ட சைவநூல்களிலெல்லாம், அத்வைத வேதாந்தமே விசேஷித்துக் கூறப்படுகிறது.

**வினா :** - வேதாந்தத்தின் பொருள் அத்வைதமே என்பதை இன்னும் யார் விளக்கியிருக்கிறார்கள்?

**விடை :** - "மறைமுடி வாக்கியக்களுக்கெல்லாம் இரண்டற்ற பரம்பொருளைக் கூறுவதிலேயே கருத்து" என்று ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

### பாகம்-2

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*17. ஸ்ரீ பாகவதத்தில் வியாசர் கிருஷ்ணர் ராமர் ந்ருஸிம்ஹ அவதாரங்களைக் குறிப்பிடும் போது ஸ்ரீமன் நாராயணன் எல்லையற்ற கருணையினாலேயே அவதாரங்களை எடுத்தார் என்று வலியுறுத்த ஒவ்வொரு அவதாரத்தைக் கூறும் போதும் 'அத்புத' என்ற அடைமொழியைச் சேர்த்து இருக்கிறார். இவ்விஷயத்தையே ஸ்ரீ தீர்த்தர் 'மங்களாலய மாமவ தேவ என்று தொடங்கும்' முதல் தரங்கம் கீதம் 10 -ல் 'அதிகருண வித்ருதாத்புதரூபா' என்ற சொற்றொடரால் விளக்கியுள்ளார். இதையே ஸ்ரீ ஜயதேவர் முதல் அஷ்டபதியில் ஒவ்வொரு அவதாரத்தை பற்றி சொல்லும் போதும் 'கேஶவ த்ருத, கேஶவன் தரித்த' என்று கூறி அந்த அந்த அவதாரத்தை வர்ணிப்பதன் மூலம் ஸ்ரீ கிருஷ்ணன் பூர்ண பரமாத்மா என்று எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறே ஸ்ரீ தீர்த்தரும் தன் நூல் முழுவதிலும், ஸ்லோகத்திலும், சூர்ணிகையிலும், கீதத்திலும் ஸ்ரீ கிருஷ்ணன் பிறப்பு, இறப்பு, அற்றவன், எங்கும் நிறைந்திருப்பவன் ப்ரஹ்மாண்டங்களைத் தாங்கி நிற்பவன். நிலையான ஆனந்த வடிவு உடையவன். தன் அடியார்களைக் காப்பாற்ற மாயையால் பல அவதாரங்களைச் செய்தவன். அஹம் ப்ரஹ்மாஸ்மி தத்வமஸி என்ற மஹாவாக்கியங்களால் ஏற்படும் ஞானத்தால் உணரப்பட்டவன் என்ற கருத்தை 'ஸகல நிகமாந்த ஜனிதாந்தமதி விதிதம்' என்று கூறியுள்ளார். தரங்கம் - 3 கீதம் 34ல் 7வது சரணம்) ஸ்ரீமத் பாகவதமும் இதே கருத்தை பெரிய நீர் தேக்கத்திலிருந்து எப்படி சிறிய கால்வாய்கள் ஆயிரம் தோன்றுகின்றதோ அது போல மத்ஸ்யம் முதல் கல்கி அவதாரங்கள் அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடமிருந்து தோன்றியவைகளே. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பரிபூரண தத்வம் மற்ற அவதாரங்கள் அவருடைய அம்ஸங்களே என்று கூறுகின்றது பாகவதம் ஸ்க1. அத்ய 3 - ஸ்லோ 26 - 28)*

*18. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு தந்தையாகப் போகிறார் என்ற காரணத்தால் வஸுதேவர் பிறப்பின் போதே மங்கள வாத்யங்களை தேவர்கள் முழக்கினர் என்ற காரணத்தால் வஸுதேவருக்கு 'ஆனகதுந்துபி' என்ற பெயர் ஏற்பட்டது. (பாகவதம் ஸ்க. 9 அத்யா 24 - ஸ்லோ 29-30). இதையே ஸ்ரீ தீர்த்தர் 'அலௌகிகமிதம் ரூபமாலோக்யானக துந்துபி' என்று குறிப்பிடுகிறார் முதலாவது தரங்கம் ஸ்லோகம் 29)*

*19. 'பங்க்தி' எனப்படும் சந்தஸ் (விருத்தம்) ஓரடிக்கு ஐந்து எழுத்துள்ளதாகும். அவ்விதம் ஐந்து பொருட்கள் அடங்கிய கூட்டங்கள் சேர்ந்த இவ்வுலகம் 'பாங்கதம்' என்று அழைக்கப்படுகிறது. இவை உலக பாங்க்தம், தெய்வ பாங்க்தம், பூத பாங்க்தம், வாயு*

பாங்க்தம், இந்திரிய பாங்க்தம், தாது பாங்க்தம் என ஆறு வகைப்படும். இவ்வித ஆறு பாங்க்தங்களும் சேர்ந்தே உள்ளிலும், வெளியிலுமுள்ள உலகமாகும். இதை, பரஹ்மமாக உபாஸிப்பவன் பரம்பொருளாகவே ஆகின்றான் என்று தைத்தீரிய உபநிஷத் சிக்ஷாவல்லி 7-ம் அனுவாகத்தில் 'பாங்கத்ம்வா இதகும் ஸர்வம். பாங்கதேனைவ பாங்க்தக் ஸப்ருணோதீதி ஓம் இதிப்ப்ரஹ்மா ஓம் இதீதகும்' ஸர்வம் என்பதின் கருத்தையே ஸ்ரீ தீர்த்தர் 2வது தரங்கம் ஸ்லோ. 44ல்) 'பாங்க்த தர்ம கர்மேண வேத்யம்' எனக் கூறுகிறார்.

20. பகவத்கீதையிலுள்ள (அத் 4 ஸ்லோக 8) 'பரித்ராணாய ஸாதூனாம்... ஸம்பவாமி யுகே யுகே' என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா இவ்வுலகில் தீயவர்களையழித்து அதர்மத்தையகற்றி பக்தர்களை ரக்ஷிக்கவும், தர்மத்தை தழைக்கச் செய்வதற்கு தன் இஷ்டப்படி பிறப்பு எடுக்கிறேன் என்ற கூற்றை விளக்க ஸ்ரீ தீர்த்தர் 2வது தரங்கம் சூர்ணிகை 15-ல் 'ஸ்வபக்தானுக்ரஹ சிகீஷயா ஸ்வேச்சயா ப்ராப்த கோபால விக்ரஹ' என்ற சொற்றொடரைப் ப்ரயோகப்படுத்தியுள்ளார்.

21. 2வது தரங்கம் சூர்ணிகை 17ல், ஸ்ரீ தீர்த்தர் 'ஆருருக்ஷுநிவாரூடயோகி' என்ற சொற்றொடரைப் ப்ரயோகப்படுத்தியுள்ளார். எல்லாம் அறிந்த கண்ணன் உயரத்தில் உள்ள உரிகளில் வைக்கப்பட்டிருக்கும் தயிர், பால், வெண்ணைய் முதலியவைகளை எடுப்பதற்கு வழி தெரியாத கோப குழந்தைகளுக்கு உபாயங்களைக் கற்றுக்கொடுத்தான் என்பது பொருள். 'ஆருருக்ஷுநிவாரூடயோகி' நிஷ்காம கர்மாக்களினால் சித்த ஸுத்தி அடைந்தவன் ஆரூட யோகி. அதைப் பெற விரும்புபவன் 'ஆருருக்ஷு யோகி' என்று ஸாஸ்திரங்கள் கூறுகின்றன. முன்னவர் பின்னவருக்கு வழிகாட்டுபவர். 'ஆருருக்ஷோர் முனோர் யோகம்' என்று தொடங்கும் பகவத்கீதை அத் 6 ஸ்லோ 3லும் இக்கருத்தே கூறப்படுகிறது.

22.வராஹபுரி புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ நாராயணதீர்த்தரால் ஆரம்பிக்கப்பட்டதும், பக்தர்களால் இன்றுவரை பக்தி ஸ்ரத்தையுடன் நடத்தப்பட்டு வரும் உரியபடி தத்வத்தை விளக்குவது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும் என தோன்றுகிறது. மனிதன் தன்னுள்ளேயே இருக்கும் ப்ரஹ்மத்தை உணர்ந்து தானும் அதுவாகவே ஆகி பேரானந்தத்தை அனுபவிக்க அக்ஞானம், அறியாமை, தடையாக உள்ளது. வாழ்க்கையில் பல்வேறு இடர்கள் மனிதனை அவன் லக்ஷியத்தை அடைய முடியாமல் குறுக்கிடுகின்றன. இவற்றை ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்மநிவேதனம் ஆகிற ஒன்பது வகைப்பட்ட பக்தியில் ஈடுபடுவதால் ஏற்படும் ஞானத்தால் இடர்களை தகர்த்து, பகவதனுக்ரஹத்தாலும், ஞானிகளின் துணை கொண்டும், ப்ரஹ்மத்துடன் இரண்டற கலந்து ப்ரஹ்மானந்தம் அடைவதேயே விளக்குவது போல், உரியடி உத்ஸவம் அமைந்துள்ளது.

(தொடரும்)

# ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

இப்பகுதியில் நமது தர்மத்தைப்பற்றிய விவரங்கள் கேள்வி பதிலாகக் கொடுக்கப்படுகின்றன. ஏற்கனவே போன இதழில் ''பித்ரார்ஜிதம்''எனும் தலைப்பில் தொடர் கட்டுரையாக வந்தது. இருப்பினும் அதையே கேள்வி பதிலாகத் தந்தால் நன்றாக இருக்கும் என்று பாலபெரியவா அபிப்ராயப்பட்டார்கள். பலவருடங்களுக்கு முன் எழுதப்பட்டது. எழுதியவர் மகாபண்டிதர். கூறியது கூறல் எனும் குறை இருப்பினும் தர்மத்தைப் பற்றி இருப்பதால் தோஷம் ஆகாது.வினாடி வினா நிகழ்ச்சிக்கு பயன்படும்.

1. **கேள்வி : ஈஸ்வரன் என்பது யார் ?**

**பதில் :** எல்லா உலகங்களுக்கும் எவர் நாதனோ எங்கும் நீக்கமற எவர் நிறைந்திருப்பாரோ எல்லா ஜீவன்களிலும் ஊடுருவி இருப்பவர் எவரோ எல்லா சக்தியையும் கொண்டவர் எவரோ அவரே ஈஸ்வரன்.

2. **கேள்வி : வேதம் என்று எதனை சொல்லுவது?**

பதில் : காலத்தால் கணக்கிடமுடியாத பழமையான அழிவற்ற எவராலும் இயற்றப்படாத அறம் பொருள் இன்பம் வீடு என்று நாங்கு வித குறிக்கோளை அடைகிற வழியினை காட்டுவது எதுவோ அதுவே.

3. **கேள்வி : இதற்கு மறுபெயர் என்ன?**

பதில் : குருவின் மூலமாக கேட்டுத் தெரிந்து கொள்ளப்படுவதால் ''ஸ்ருதி'' எனும் இன்னொரு பெயரும் உண்டு.

4. **கேள்வி : வேதம் எத்தனை?**

பதில் : வேதம் நான்கு

5. **கேள்வி : அவை யாவை?**

பதில் : ருக், யஜுர், ஸாம அதர்வண வேதம்.

6. **கேள்வி : சாகைகள் என்றால் என்ன?**

பதில் : வேதத்தின் அம்சத்தை சாகை என்று சொல்லுவர். ஸம்ஹிதையின் வேறுபாட்டையும் சாகை என்பர்.

7. **கேள்வி :** எல்லா வேதங்களின் சாகைகள் எத்தனை?

பதில் : மொத்தம் 1131 சாகைகள்

8. **கேள்வி :** ருக்வேதத்தின் சாகைகள் எத்தனை ?

பதில் : மொத்தம் 21

**கேள்வி :** அவை யாவை ?

பதில் : ஆஸ்வலாயினி, சாகலாயினி, சாகலா, பாஷ்கலா, மாண்டூக்யா நாட்டின் வட ப்ராந்த்யத்தில் சாகலசாகையும், தென் நாட்டில் பாஷ்கல சாகையும் தான் கிடைக்கின்றன. மற்றவை மறைந்து விட்டன.

9. **கேள்வி :** யஜுர்வேதத்தின் சாகைகள் எத்தனை?

பதில் : 101 சாகைகள் அவைகளில் ஐந்து சாகைகள்தான் கிடைக்கின்றன. அவை யாவை ?

தைத்ரீய, மைத்ராயாணி கட, கபிஷ்டல ஸ்வேதாஸ்வர என்பவை. சுக்ல யஜுஸ்ஸின் வாஜஸனேயம், காண்வ சாகைகள் மட்டும் தான் இப்போது கிடைக்கின்றன.

10 **கேள்வி :** ஸாம வேதத்திற்கு எத்தனை சாகை?

பதில் : 1000 சாகைகள். அவை யாவை?

தற்போது கீழ்கண்ட சாகைகள் தான் கிடைக்கின்றன. கௌதுமம் ஜைமினீ, ராணாயனீயம்.

**11. கேள்வி : அதர்வண வேதத்திற்கு எத்தனை சாகைகள் ?**

பதில் : 9 சாகைகள். தற்போது பைப்பலாத சௌனகீய என்று 2 சாகைகள் மட்டும் கிடைக்கின்றன.

12. **கேள்வி :** ருக்வேதத்தின் சாகலசாகையின் விவரணம் என்ன?

பதில் : இச்சாகையில் 10 விதங்கள் உள்ளன. இதனை மண்டலம் என்று சொல்லப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் பல்வேறு ஸூத்ரங்களும் ருக்குகளும் உள்ளன. 1028 ஸூக்தங்கள் உள்ளன. 10580 ருக்குகள் உள்ளன.

13. **கேள்வி :** யஜுர் வேதத்தின் விவரணம் என்ன?

பதில் : இவ்வேதம் இரண்டாக உள்ளது. சுக்லம், கிருஷ்ணம் என்று பெயர். சுக்ல

வேதத்தில் வாஜஸனேயம், மாத்யதின என்று 2 சம்மிதைகள் உள்ளன. 40 அத்யாயங்கள் உள்ளன. இதில் யஞ்யங்கள் சம்பந்தமான விஷயங்கள் உள்ளன.

14. **கேள்வி :** க்ருஷ்த் யஜுர் வேதத்தில் தைத்ரீய சாகையில் எத்தனை மந்த்ரங்கள் உள்ளன?

பதில் : 24 அஷ்டகங்கள் 44 ப்ரபாடகங்கள் 651 அனுவாகங்கள் 2198 மந்த்ரங்கள் உள்ளன.

15. **கேள்வி :** சுக்ல யஜுர் வேதத்தின் மாத்யதின சாகையில் எத்தனை மந்த்ரங்கள் உள்ளன?

பதில் : இந்த சாகையில் 40 அத்யாயங்கள் 1975 மந்த்ரங்கள் 90535அக்ஷ ரங்கள் 1230 (-) போன்ற சின்னங்கள் உள்ளன.

16. **கேள்வி :** ஸாமவேதத்தின் விவரணம் என்ன?

பதில் : 1000 சாகைகளில் கௌதுமினீ சாகையில் 29 அத்யாயங்கள், 88 ஸாமங்கள் 1824 மந்த்ரங்கள் உள்ளன.ராணாயணி சாகையில் 1549 மந்த்ரங்கள் உள்ளன.

17. **கேள்வி :** அதர்வண வேதத்தின் விவரணம் என்ன?

பதில் : 9 சாகைகளில் சௌனகத்தில் 20 காண்டங்கள், 34 ப்ரபாடகங்கள் 111 அனுவாகங்கள் 733 வர்கங்கள்,759 ஸூக்தங்கள், 5977மந்த்ரங்கள் உள்ளன.சில சாகைகளில் ஆரண்யம் ப்ராம்மணம் உபனிஷத் மட்டுமே கிடைக்கின்றன. மந்த்ர பகுதி கிடைக்கவில்லை.

(தொடரும்)

தமிழ்நாடு பிராமண சங்கம்-ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ் இணைந்து கைலாஷ் யாத்திரையை

# சலுகை கட்டணத்திலும், மாதாந்திர தவணையாகவும்

## செலுத்தக் கூடிய வகையில் சேவை மனப்பான்மையுடன் நடத்தும்

# கைலாஷ்-மானஸரோவர்

மற்றும் **வைணவ** சம்பிரதாயத்துடன் கூடிய

# முக்திநாத் திவ்யதேச யாத்ரா-2020

**20 ஆண்டுகளில் 7300 சிவனடியார்கள் தரிசனம் பெற அழைத்து சென்று சாதனை கொண்ட ஒரே நிறுவனம்**

சிவமே தமிழ் - தமிழே சிவம். மனிதனாகப் பிறந்த நம் அனைவருக்கும் இறைவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் மனதின் அடியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அந்த இறைவனாகிய எம்பெருமான் சிவனையும் பார்வதி தேவியையும் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கயிலையில் நேரில் தரிசித்து எல்லையில்லாப் பேரின்ப நிலை அடையவும், மேலும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவர் தடாகத்தில் சிவபூஜைக்குப்பின் திருமுறைகளோடு, கயிலாய வாத்தியங்கள் இசைக்க, சங்க நாதம் ஒலிக்க, தமிழ் வேதங்களுடன், சிவ வாத்திய முழக்கத்தோடு அடியார்கள் ஆனந்த நடனமாடிட, சகல பரிவாரங்களும் அசைந்து வர, வரலாறு பதிவு செய்யும் விதமாக அடியார்கள் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் இந்துக்களின் இறைநெறியான திருவாசகம் முற்றோதலுடன் கூடிய இந்த யாத்திரையின் மூலம் எழுச்சி மிக்க அபரிதமான ஆயுளை நீடிக்கச் செய்யும் சகல சக்திகளும் நிறைந்த பிரபஞ்ச உயிர் சக்தியை நீங்கள் நேரில் பெறவும், மகிமைகொண்ட பிரபஞ்ச தெய்வீக நடனமான (Cosmic Dance) சிவதாண்டவத்தை நேரில் தரிசிக்கவும், மேலும் நமது உடலின் அத்தனை ஆதார சக்கரங்களும் விழித்துக் கொள்ள ஆன்ம சக்தி இறைசக்தியோடு எழுச்சியுடன் இணைவதை நீங்கள் உணரவும் ஓர் அரிய வாய்ப்பு!

ஆன்மீக அதிசய அற்புதங்கள் நிகழ்ந்த, தெய்வங்கள் வாழ்கின்ற திருக்கயிலையில்
**நடையிடுங்கள்!**

மானஸரோவர் புனித நீரில் மூழ்கியெழும் பேறுபெற்று தெய்வீக மர்மங்கள் நிறைந்த அவ்விடத்தில்
**தியானியுங்கள்!!**

கயிலாயத்தின் சூட்சம அதிர்வுகளையும், கயிலாயத்தின் ரகசியங்களையும்
**உணர்ந்திடுங்கள்!!!**

## தாங்கள் கடவுளைக் காணப் போகிறீர்கள்!
## கடவுளோடு கலந்துறவாடப் போகிறீர்கள்!!

| மே 07 | ஜூன் 05 | ஜூலை 04 | ஆக.03 | செப்.01 |
|---|---|---|---|---|
| சித்ரா பௌர்ணமி | வைகாசி பௌர்ணமி | ஆனி பௌர்ணமி | ஆடி பௌர்ணமி | சிவ-பார்வதி திருக்கல்யாண சிறப்பு பெருவிழா யாத்திரை |

| | | |
|---|---|---|
| சென்னையிலிருந்து ரயில் மூலம் டெல்லி வழியாக காட்மண்டு அடைந்து, பின்பு அங்கிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 20 நாட்கள் | காட்மண்டுவிலிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 14 நாட்கள் | சென்னையிலிருந்து விமானத்தில் லக்னோ வழியாக ஹெலிகாப்டர் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 11 நாட்கள் |

அனைத்தையும் குணமளிக்கும் சக்தி நிறைந்த மானஸரோவர் தடாகத்தில் புனித நீராடி தெய்வீக அதிசயங்களை காணவும், கிரிவலம் சென்று கயிலைநாதனை முழுமையாக தரிசிக்கவும், நமக்குள்ளே இருக்கும் பிரபஞ்சம் தூண்டப்படவும், ஆற்றல் மிக்க பாசிடிவ் காஸ்மிக் எனர்ஜி நம்முள் பிரவேசித்து பிரதிபலிப்பதை நிதர்சனமாக உணர்ந்து தெய்வீக பேரின்ப நிலையை அடையவும், யோகா மற்றும் பிராணாயாமம் போன்ற சிறப்பு பயிற்சிகளை முறையாக அளித்து யாத்திரை முழுவதும் நாங்களே உடன் இருந்து தகுந்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்வது இந்தியாவிலேயே யாத்திரையில் 20 வருடம் அனுபவம் கொண்ட நாங்கள் மட்டுமே

**ஸ்ரீராமானுஜரின் 1003வது அவதார ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீராதா கல்யாணம், உபன்யாசம், பாராயணத்துடன் கூடிய**


# நேபாள்-ஸ்ரீசாளகிராம முக்திநாத் திவ்யதேச யாத்ரா

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படும் | ரயில் மூலம் 12 நாட்கள் விமானம் மூலம் 6 நாட்கள்

சீனா, திபெத், நேபாள் டூரிஸம் போர்டில் பெர்மிட் மற்றும் விசாவை நேரடியாக பெறுவதால் குறைந்த கட்டணத்தில் ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்மண்டு வரை தொடர்ந்து அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே!

ஞான ஒளி வீசும் சிவனின் வாசஸ்தலத்தை தரிசிப்பதன் மூலம் காணக்கிடைக்காத பல அற்புதங்களை தாங்கள் காணப் போகிறீர்கள். தங்களின் உள்ளத்தையும், உணர்வுகளையும் உயர்த்தி மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயரப் போகிறீர்கள். நூறு பிறவியின் பெரும்பயனை அடையப் போகிறீர்கள்

**கயிலை தரிசனம் நம் வாழ்வை நீடிக்கும் ஆற்றல் கொண்ட அதிர்வலைகளைக் கொண்டது**



GET ₹ 40,000 FOR KAILASH
GET ₹ 10,000 FOR MUKTHINATH
SUBSIDY FROM TAMILNADU GOVT.

#1 yatra

தெய்வீக புதிராக நிற்கும் கயிலை மலையானை தொட்டு ஸ்பரிசித்து மெய்சிலிர்க்க வைக்கும் பேரின்நிலை, யோகநிலை அடைய தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

# ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்®

sapyservice@gmail.com | www.annapooraniyatra.com

**63, NADU STREET, MYLAPORE, CHENNAI-4 ✆ 8056 333 333, 8056 444 444**

யாத்திரை பதிவு கட்டணம் ரூ. 5,000 மட்டுமே. மேலும் கைலாஷ்-மானஸரோவர், முக்திநாத் யாத்திரை கட்டணம் மற்ற நிறுவனங்களை விட ரூ. 10,000 குறைவே.

**SPECIAL CARE FOR SENIOR CITIZENS**
**PASSPORT WILL BE ARRANGED**

சீன, திபெத், நேபாள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**தெய்வ உலகம் திருக்கயிலையில்** இறைவனை நீங்கள் **பார்க்கலாம்!** இறைவன் பேசுவதை நீங்கள் **கேட்கலாம்!** இறைவனோடு நீங்கள் **பேசலாம்!** இறைவன் நடத்தும் அற்புதங்களை நீங்கள் **உணரலாம்!**

**யாத்திரையில் கலந்துகொள்ளும் அனைத்து அடியார்களையும் கிரிவலம் அழைத்துச் செல்வதே எங்களின் முக்கிய நோக்கமாகும்**